# உதயன்

சுடர் : 36 | கதிர் : 201 | செவ்வாய்க்கிழமை | ஆனி 01 ஆம் நாள் 15 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## 335 பேர் யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையின் தாக்கத்தால் இதுவரை 93 குடும்பங்களைச் சேர்ந்த 335 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று 14

# அரசை வீழ்த்துவதற்கு விரைவில் நடவடிக்கை

### ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்கிறது சொல்கின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் விலை அதிகரிப்பு உட்பட மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையிலான பல தீர்மானங்களை அரசு முன்னெடுத்துள்ளது. இதே நிலைமை தொடருமாயின் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்காக அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. 15

## 2,259 பேருக்கு நாட்டில் தொற்று

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 259 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்று அரச தகவல் 15

## 42 பேருக்கு வடக்கில் தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கில் மேலும் 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 15

## மேலும் 124 பேர் தொற்றால் சாவு

### ஒரே நாளில் அதிக சாவு மொத்த உயிரிழப்பு 2,260

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் கொரோனா பெருந்தொற்றுக்குள்ளாகி மேலும் 124 பேர் சாவடைந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல 15

### எரிபொருள் விலைக்குறைப்பு

## இரவுவரை இழுபறியில் பேச்சுவார்த்தை

கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் விலை தொடர்பில் நேற்று ஆராயப்பட்டது. எனினும், எதுவித முடிவும் வெளியாகவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே கொரோனா பிடிக்குள் 15

### எரிபொருள் அறிக்கை விவகாரத்தால்

## மொட்டுக் கட்சியின் செயலரை வெளுத்துக்கட்டும் 8 கட்சிகள்!

கொழும்பு, ஜூன் 15

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தின் செயற்பாட்டை, அரசுக்கு ஆதரவு வழங்கும் எட்டு பங்காளிக்கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளன. அத்துடன், அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் இத்தகைய நடவடிக்கையை அனுமதிக்க முடியாது எனவும் சுட் 15

## திருமணத்தில் பங்கேற்ற 16 பேர் கட்டாயத் தனிமை

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருமண நிகழ்வில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஆள்கள் கூடியமையால், அதில் பங்கேற்ற 16 பேர் நேற்று தனிமைப்படுத் 15



## நாட்டைத் திறக்கக்கோரி நடு வீதியில் குந்திய பிக்கு

கொழும்பு, ஜூன் 15

கொரோனாத் தொற்று பரவாமலிருக்க நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் பயணக் கட்டுப்பாடுகளை நீக்கி நாட்டைத் திறக் 15

### பருத்தித்துறைக் கடலில்

## ரூ.7 கோடி பெறுமதியான கஞ்சா சாக்குகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15

பருத்தித்துறை கடற்பரப்பில் 237 கிலோ 500 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை பட 15




செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி
021 493 0000
077 1209994

விளம்பரம்
021 493 1111
071 6182182


## பசியில் வாடுவோருக்கு உதவ நிதி உதவி கோருகிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜூன் 15

தொடரும் பயணத்தடை மற்றும் முடக்கம் ஆகியவை காரணமாக பசியில் வாடும் ஏழை, எளிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக முடிந்தளவு நிதி உதவியை வழங்குமாறு 'தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு' நிதிய பொறுப்பாளரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக் 14

## கடலில் பஸ்களை இறக்க தமிழக மீனவர்கள் எதிர்ப்பு

### போராட்டத்தில் குதிக்கவும் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில், மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், கைவிடப்பட்ட பஸ்களை கடலில்போடும் நடவடிக்கையை இலங்கை மீன்பிடி அமைச்சு மேற்கொண்டுள்ள நிலையில், அந்த நடவ 15




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## படகுடன் ஆயுததாரிகள் ராமேஸ்வரத்தில் கண்டறிவு

### தமிழகம் முழுவதும் உஷார் நிலை

கொழும்பு, ஜூன் 15

தமிழகத்தின் கரையோர மாவட்டமான ராமேஸ்வரத்தில், ஆயுதம் தரித்த நபர்களுடன் மர்மப் படகு ஒன்று உலாவித் திரிந்தமை கண்டறியப்பட்டதையடுத்து தமிழகம் முழுவதும் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டுள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை மாலை இந்தப் படகின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளது. படகில் இருந்தவர்கள் ஆயுதங்கள் வைத்திருந்துள்ளனர். அவர்கள் யார் என்பது இதுவரையில் கண்டறியப்படவில்லை. இதனையடுத்து இந்திய மத்திய புலனாய்வு அமைப்புக்கள் மற்றும் தமிழக மாநில காவல்துறை ஆகியவை விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

உடனடியாக தமிழகத்தின் கரையோர மாவட்டங்களில் ஆயுதம் ஏந்திய காவல்துறையினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சோதனை நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (ஒ.5,இ)

## இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி விற்பனை இடம்பெறவில்லை எனக்கூற முடியாது

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்



**கொழும்பு, ஜூன் 15**

**இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி விற்பனை நடைபெறவில்லை என்பதை நூறு வீதம் உறுதிப்படுத்த முடியாது. இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசிகளை விற்பனை செய்யவேண்டாம் என்று எழுத்துமூலமான அறிவித்தல்களை நாம் வழங்க முடியாது.

ஆனால் தடுப்பூசிகள் விற்பனை செய்யப்படுவதை தடைசெய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம்.

இலங்கையில் தடுப்பூசிகள் விற்பனை செய்யப்படவில்லை என்பதை நூறு வீதம் உறுதிப்படுத்த முடியாது.

சுமார் 2 மில்லியன் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ள பின்னணியில் பல்வேறு நபர்கள் பணத்தை அறவிட்டு அதனைச் செய்திருக்கலாம்.

ஆனால் பொதுமக்கள் பணத்தைக் கொடுத்து தடுப்பூசி ஏற்றிக்கொள்வதைத் தவிர்க்கவேண்டும்.

அவ்வாறு தடுப்பூசி ஏற்றுவதற்கு யாராவது பணம் கோரினால் மக்கள் உடனடியாக எமக்கு முறைப்பாடு செய்யவேண்டும்.

அனைத்து பொதுமக்களுக்கும் எதிர்காலத்தில் தடுப்பூசி கிடைக்கும் என்பதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும்- என்றார். (ஒ.5,இ)

## பயணத்தடையில் அரிசி திருடிய பெண் கைதாம்!



கொழும்பு, ஜூன் 15

2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசி மூடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர், அவரிடமிருந்து அரிசி மூடைகளைக் கொள்வனவு செய்த வர்த்தகர்கள் இருவர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மவுன்டன்லவனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கு இடமான பெண் ஒருவரைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அவர் 4 கிராம் மற்றும் 100 மில்லிகிராம் ஹெரோய்ன் வைத்திருந்தனர் என பொலிஸார் கூறுகின்றனர். அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தபோது கடந்த 11ஆம் திகதி சுப்பர் மார்க்கெட்டில் அரிசி மூடைகளைத் திருடியது தெரியவந்தது எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

5 கிலோ நிறையுடைய 5 அரிசி மூடைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டது. மேலும் அவர் அரிசி மூடைகளை விற்பனைசெய்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் கூறுகின்றனர். (ஒ.5,இ)

## பேர்ள் கப்பல் கப்டனுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 15

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீ விபத்துக்குள்ளான எம்வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கப்டன் நேற்று மாலை கைது செய்யப்பட்டு சில மணி நேரங்களில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கப்பல் கப்டன் நேற்று மதியம் கைதுசெய்யப்பட்டிருந்தார். கொழும்பு உயர் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார். 2 மில்லியன் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார். வெளிநாடு செல்வதற்கு அவருக்கு தடை விதித்தது நீதிமன்றம். (ஒ.5,இ)

### வரிச்சலுகையை முன்னிறுத்தி

## இலங்கையின் இறையாண்மையை சவாலுக்கு உட்படுத்தும் ஐரோ. ஒன்றியம்

### அமைச்சர் கெஹலிய காட்டம்



கொழும்பு, ஜூன் 15

எங்களது அரசமைப்பில் உள்ள விடயங்களை மாற்றுமாறு வேறு ஒரு தரப்பு கட்டளையிட முனைந்தால் அது எங்கள் இறையாண்மையைப் பாதிக்கும் செயலே. இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையையும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கக்கூடாது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நாங்கள் எந்த அடிப்படையில் இரத்துச்செய்யமுடியும்? நாளை அவர்கள் ஜனாதிபதி முறைமையை மாற்றுமாறு எங்களுக்கு கட்டளையிட்டால் நாங்கள் என்ன செய்வது? ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையுடன் தொடர்புடைய தொழிலாளர் சட்டங்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் சட்டங்களில் மாற்றத்தைக் கோரினால் அதை நாம் பரிசீலிக்க முடியும். ஆனால் ஜி.எஸ்.பி. பிளஸின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாத விடயத்தை மாற்றுமாறு கோருவதை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்?

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு இன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றக்கோருகின்றார்கள். எங்கள் அரசமைப்பின் ஒரு விடயத்தை மாற்றுமாறு வெளிச்சக்திகள் கட்டளையிட முனைவது, இறையாண்மை கொண்ட எங்கள் நாட்டுக்கும் மிகப் பெரும் பிரச்சினை- என்றார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச்செய்வது தொடர்பில் அரசு எந்தப் பேச்சுக்களையும் நடத்தவில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னைய காலத்திலும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு நீக்கப்பட்டிருந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவை கடந்த மாதம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இதன்போது கூட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெறுவது தொடர்பில் எந்தவொரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை 2010ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச பதவி வகித்தபோதும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீளப்பெறப்பட்டது. இதன்போது 6 மாதங்கள் முன் அறிவித்தல் வழங்கியே அது மீளப்பெறப்பட்டது. (ஒ.5,இ)

## இலங்கையுடனான உறவை மறுபரிசீலனை செய்கிறதாம் டில்லி

### இந்திய ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூன் 15

கொழும்புத் துறைமுக நகர சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இலங்கையுடனான உறவை டில்லி மறுபரிசீலனைசெய்து வருவதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பெயர் குறிப்பிட விரும்பாத டில்லி உயர்மட்டங்களின் கருத்துக்களை அடிப்படையாக வைத்து மேற்படி செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை முழுமையாக சீனாவின் பக்கம் சாய்ந்துவிட்டது என்பதை கொழும்புத் துறைமுக நகர சட்டம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக டில்லி உணர்ந்துகொண்டுள்ளது.

**இலங்கை முழுமையாக சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.** இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அது உணர்ந்துகொண்டுள்ளது.

ராஜபக்சக்கள் ஆட்சிக்கு மீண்டும் வந்த பின்னர் இந்தியாவுடனான உறவு முறியத் தொடங்கியது. கடந்த பெப்ரவரி மாதம், முன்னைய அரசு வழங்க இணங்கிய கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்காமல் இருக்கும் தீர்மானத்தை ராஜபக்சக்கள் எடுத்ததைத் தொடர்ந்து இலங்கையுடனான டில்லியின் உறவு மேலும் சரியத்தொடங்கியது.

இந்தியா முதல் என்ற கொள்கையை இலங்கை கடைப்பிடிக்கத் தவறுகின்றது என்பதை டில்லி கவலையுடன் நோக்குகின்றது- என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 35 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

யாழ்ப்பாணம். ஜூன் 15

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட அராலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் வதியும் 35 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகமும், பீதாம்பரம் அறக்கட்டளை நிதியமும் இணைந்து இந்த உதவிகளை நேற்று முன்தினம் வழங்கின. (ஐ-9)





# 30 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கொடிகாமம்,ஜூன் 15

பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அராலி கிழக்கு ஜே/163 கிராம அலுவலர் பிரிவில் தெரிவு உள்ள குடும்பங்களுக்கே கேகேபி இளைஞர் கழகத்தால் இந்த உதவிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ஐ-159)

## திருச்சி சிறைச்சாலையில்

# உணவொறுப்பில் ஈடுபடும் கைதிகளை விடுதலை செய்க

### தமிழ் நாட்டு முதலமைச்சரிடம் செல்வம் எம்.பி. கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 15**

**முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.**



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாத் தொற்றை கருத்தில் கொண்டு முகாம்களில் வாழும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சிரமங்களையும் கஸ்டங்களையும் தங்களது மேலான கவனத்துக்கு கொண்டுவந்து அதற்கான தீர்க்கமான சாத்திகமான முடிவுகளை எடுக்குமாறு தங்களை வேண்டி நிற்கின்றேன். அத்தோடு இந்த குடும்பங்களின் ஒருசில குடும்பத் தலைவர்கள் திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து தங்கள் வாழ்க்கையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளனர். முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் சிறைக் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுப்பீர்கள் என நான் நம்புகிறேன்- என்றுள்ளது. (ஐ-56)



# பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப்பொதிகள்

மன்னார்,ஜூன் 15

பயணத்தடை காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மன்னார் பேசாலையைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

வட மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலுக்கு அமைவாக, மன்னார் மாவட்டத்துக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுல்ல வீரசிங்க தலைமையில் பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமஜீத்தின் உதவியுடன் உலர் உணவுப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-213)

# 250 கால் போத்தல் சாராயங்களுடன் இளைஞன் கைது!

முல்லைத்தீவு,ஜூன் 15

மீன் ஏற்றிச் செல்லும் வாகனத்தில் சட்டவிரோதமாக 250 கால்போத்தல் சாராயப் போத்தல்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் சிறப்பு அதிரடிப்படையினரால் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு நகர் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

வாகனங்களில் மீன்களை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்தவேளை கரைச்சிக்குடியிருப்பு பகுதியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார்.

முள்ளியவளை நீராவிப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் பயணித்த வாகனம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-19)




# வெவ்வேறு பகுதிகளில் இரு செல்கள் மீட்பு

கிளிநொச்சி,ஜூன் 15

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊழவனூர் மற்றும் பிரமந்தனாறு பகுதிகளில் இருந்து இரு செல்கள் நேற்று மீட்கப்பட்டன. சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அவர்கள் சம்பவ இடங்களுக்குச் சென்று செல்களை மீட்டனர். அதன் பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் செல்களை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-113)





# வீதி விபத்தில் இளைஞன் காயம்

கொடிகாமம்,ஜூன் 15

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன், மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் மட்டுவில் அம்மன் கோவில் வீதியில் நேற்றுமதியம் இடம்பெற்றுள்ளது.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் அந்தரத்தில்

## ஆனந்த தேரர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 15

**ராஜபக்ச குடும்பத்தினரின் அரசியல் வாழ்க்கை முடிவுக் கட்டத்தில் உள்ளது. மக்கள் இவர்களுக்கு எதிராக வீதியில் இறக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**

நாராஹென்பிட்டிய அபயராம விகாரையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்கு எதிராக மக்களின் கோபம் நாளுக்கு நாள் அதிகரித்து மக்கள் வீதியில் இறங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. அப்படி நடந்தால், ராஜபக்சவினர் குடும்பத்துடன் வீட்டில் இருக்க வேண்டியது தான். அப்படியான இடத்துக்கு வழியை ஏற்படுத்தாது, நாட்டை முன்னெடுத்துச் செல்லுங்கள் என்பதே எமது கோரிக்கை.

மாதுளுவாவே சோபித தேரர் உயிருடன் இருக்கும்போது, ஒருவரிடம் நாட்டின் அதிகாரத்தை வழங்காதீர்கள் என்ற வார்த்தையைக் கூறினார்.

இதன் மூலம் நாடு அழிவை நோக்கிச் செல்லமுடியும். அது தற்போது நடந்துள்ளது. ஒருவரிடம் அதிகாரங்களைக் கொடுத்து விட்டு, வேறு வேலைகளை தற்போது செய்கின்றனர். அமைச்சர் உதய கம்மன்பில் எரிபொருள் விலைகளை அதிகரித்தபோது, இதனைச் செய்ய வேண்டாம், மக்களின் அதிருப்தி அதிகரிக்கும் என்று கூறி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் அதனை தடுத்து நிறுத்தி இருக்க முடியும்.

அதுதான் நிறைவேற்று அதிகாரம் என்பது. அப்படியில்லை என்றால் நிறைவேற்று அதிகாரத்தில் எந்தப் பயனுமில்லை- என்றார். (ஏ-4)



## எரிபொருள் விலை உயர்வை பசில் ராஜபக்ச தடுத்திருப்பார்!

### நிமல் லான்சா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

பசில் ராஜபக்ச நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு இடமளித்திருக்கமாட்டார் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் விலையை ஏதேனுமொரு வழியில் குறைப்பதற்கு துறைசார் அமைச்சர் தலையிட வேண்டும் என்றே நாம் வலியுறுத்துகின்றோம்.

இது தொடர்பில் அரசும் அவதானம் செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பயணத்தடை தளர்த்தப்பட்ட பின்னர் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கக்கூடும். பசில் ராஜபக்ச நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள் விலையை அதிகரிக்க இடமளித்திருக்கமாட்டார். அவர் நிச்சயம் தலையிட்டிருப்பார்- என்றார். (ஏ-4,44)



## தற்போதைய நெருக்கடிகளே விலை அதிகரிப்புக்கு காரணம்

### கூறுகின்றார் நாமல்

கொழும்பு, ஜூன் 15

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளே, எரிபொருள் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் விலை ஓரளவு அதிகமாகவே இருக்கும்.

எதிர்காலத்தில் சாத்தியம் ஏற்பட்டால் எரிபொருள் விலைகள் குறைக்கப்படும். மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எரிபொருள் விலையை அரசு அதிகரிக்கவில்லை. நாட்டின் தொற்று நிலைமை மற்றும் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தற்போது இந்த முடிவை எடுக்க வேண்டியிருந்தது. தனிப்பட்ட விருப்பத்துடன் எடுக்கப்பட்ட முடிவு இது அல்ல. நடைமுறையில் உள்ள நிலைமைகளே இந்த முடிவெடுக்குக் கட்டாயப்படுத்தின- என்றார். (ஏ-4)

## அரசுக்கும் தேரர்களுக்கும் இடையில் முரண்பாடுகள்

கொழும்பு, ஜூன் 15

பௌத்த தேரர்கள் மற்றும் ராஜபக்ச அரசுக்கு இடையில் முரண்பாடு வலுத்துள்ளது என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாரஹென்பிட்டி அபயராம விகாரையில் தடுப்பூசி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், எவ்வித அறிவிப்புமின்றி திடீரென அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் கோபமடைந்த ஆனந்த தேரர், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் மிகவும் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் அண்மைய நாள்களாக வேறு சில தேரர்களும் அரசுக்குத் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். (ஏ-4)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஜூன் 15

கிளிநொச்சி மாவட்டத்தில் 'சேதனப் பசளை உற்பத்தியும் பயன்பாடும்" என்ற விடயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்கள், பிரதேச சபை செயலர்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி அரசகேசரி, மாவட்ட விவசாய பணிப்பாளர் செல்வராசா, விதை உற்பத்தி திணைக்கள பணிப்பாளர், விவசாய திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-316)

# பெரமுன செய்தியாளர் சந்திப்பு அழுத்தத்தால் திடீரென நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 15

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாடு திடீரென இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் குறித்த ஊடகவியலாளர் மாநாடு இரத்துச்செய்யப்பட்டுள்ளது என்று மொட்டுக் கட்சியின் ஊடகப்பிரிவு அறிவித்திருந்தாலும், உயர் மட்டத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கமையவே அது பிற்போடப்பட்டது என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து அதற்கு பொதுமக்கள் தரப்பில் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

இந்த நிலையில் கொரோனா நெருக்கடியால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் விதத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளமை ஏற்க முடியாது. எனவே, இந்த நிலைமைக்கு பொறுப்பேற்று துறைசார் அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் விசேட அறிக்கையொன்றை விடுத்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார்.

எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கான முடிவை வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவே எடுத்தது.

அது அரசின் முடிவு. ஜனாதிபதி மற்றும் பிரதமரைப் பாதுகாக்கவே, நெருக்கடியான நிலையிலும் விலை அதிகரிப்பு தொடர்பான அறிவிப்பை நான் சுயமாக முன்வந்து விடுத்தேன். எனவே, இந்த விவகாரம் தொடர்பில் பகிரங்க விவாதமொன்றுக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்துக்கு பகிரங்கமாக சவால் விடுக்கின்றேன் என்று கம்மன்பில தெரிவித்தார்.

இந்த நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவால் நேற்று ஊடகவியலாளர் மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் காமினி லொக்குகேயும், பொதுச் செயலாளர் சாகர காரியவசமும் இதில் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கம்மன்பிலவுக்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே குறித்த ஊடக சந்திப்பில் சாகர பங்கேற்கவிருந்தார். எனினும் இறுதி நேரத்தில் ஊடக சந்திப்பு இரத்துச்செய்யப்பட்டது. இது தொடர்பில் சாகர காரியவசம் தெரிவிக்கையில், கம்மன்பிலவின் கருத்துகளுக்கு எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும். அழுத்தம் காரணமாக ஊடக சந்திப்பு இரத்துச்செய்யப்படவில்லை- என்றார். (ஏ-4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## விலையேற்றங்களின் பின்னுள்ள அரசியல்

ஆட்சியிலுள்ள எரிபொருள்களின் விலைகளை தடாலடியாக உயர்த்தியதை அடுத்து கடும் எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ள நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விலையேற்றத் துக்கான காரணங்களை அடுக்கியிருக்கிறார்.

மசகு எண்ணெய் விலையேற்றம், எரிபொருள் இறக்குமதிக் கான அந்நியச் செலாவணி செலவு என் அந்தக் காரணங்கள் விரிகின்றன. ஜனாதிபதி உருக்கமாகப் பல காரணங்களைக் கூறியுள்ளபோதும், ஆராய வேண்டிய பல விடயங்கள் அவற்றில் இருக்கின்றன.

விலையேற்றத்துக்கான காரணங்களை அடுக்கியுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனம் என்றும், எரிபொருள் நுகர்வைக் குறைக்கும் நோக்கில் வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது என்றும், இறக்குமதியின் மீது தங்கி இருக்கும் நுகர்வுப் பொருளாதாரத்தை தேசிய உற்பத்தியின் மீது தங்கியிருக்கும் முதலீட்டு நுகர்வுப் பொருளாதாரமாக மாற்றுவதற்கும் எடுக்கப்பட்ட ஒரு தொலைநோக்குப் பார்வைகொண்ட தீர்மானமாகும் என்று கூறியிருகின்றார்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக மீள்பிறப்பாக்க சக்திவலு உற்பத்தி மேம்படுத்தப்படும் என்று கூறியுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, எரிபொருள்களால் இயங்கும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்பட்டு, மின்சாரக் கார் பாவனை ஊக்குவிக்கப்பட்டு, முச்சக்கரவண்டிகளுக்கும் மின்சார என்ஜின்களை வழங்குவது, அனைத்து வீடுகள், பாடசாலைகள், மருத்துவனைகள் உள்ளிட்ட அரச கட்டடங்களுக்கு, சூரிய சக்தி மின் உற்பத்தித் தொகுதிகளை வழங்குவது என்று பலவற்றை வரிசைப்படுத்தியிருக்கிறார்.


ஆனால் இவை நடைமுறைக்கு வருவதற்கு எத்தனை ஆண்டுகள் எடுக்கும் என்றோ, இந்த மாற்றங்கள் எத்தளவுக்கு சாத்தியமாகும் என்பது பற்றியோ எந்தத் தகவலும் இல்லை. இந்தத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்த பின்னர் படிப்படியாக எரிபொருள் விலைகளில் அதிகரிப்பை அரசு செய்திருக்குமானால் பொருத்தமானதாக இருந்திருக்கும். ஆனால் கூறப்படும் மாற்று நடவடிக்கைகளில் ஒன்று கூட இன்னமும் செயற்படு நிலையில் இல்லாதபோது, எப்போதோ நடைமுறைக்கு வரவுள்ளவற்றைக் கூறி மக்களின் வயிற்றில் அடிப்பது எந்தவகையிலும் சரியானதன்று.

தற்போதைய அரசின் இந்த நடவடிக்கைகள் தொடர்பாக இன்னொரு சந்தேகமும் பலரால் எழுப்பப்படுகின்றது. காலப்போக்கில் சீனாவின் சந்தையாக இலங்கையை மாற்றுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவும் இது இருக்கலாம் என்பதே அந்தச் சந்தேகம். ஏனெனில் உலக சந்தையில் சூரிய சக்திக் கல உற்பத்தியிலும், மின்சார வாகனத் தயாரிப்பிலும் சீனா அசைக்க முடியாத இடத்தில் இருக்கின்றது. இலங்கையில் அகலக் கால் பரப்பி அமர்ந்துகொள்ள கடன்களை அள்ளிக்கொடுத்துக் கொண்டிருக்கும் சீனா, எதிர்காலத்தில் இலங்கையின் ஒவ்வொரு வீட்டின் கூரைகளிலும் சூரிய மின்கலமாகப் படர்ந்துகொள்ளக்கூடும். இலங்கையர்களின் தலைகளின் மேல் அமர்ந்து கண்காணிக்கவும் முடியும். இந்த சந்தேகத்தைப் பொய்யென்று ஒதுக்கிவிடவும் இயலாது.

இறக்குமதியின்மீது தங்கி இருக்கும் நுகர்வுப் பொருளாதாரத்தை தேசிய உற்பத்தியின்மீது தங்கியிருக்கும் முதலீட்டு நுகர்வுப் பொருளாதாரமாக மாற்றுவதற்கு நாட்டுக்குள் செய்ய வேண்டிய எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. இறக்குமதியைத் தடைசெய்வதன் ஊடாகவும், எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பதன் ஊடாகவும் அந்த இலக்கை அடைந்துவிட முடியாது. அதேநேரம் நாடு நாடாக கடன்களை வாங்கித்தள்ளும் இப்போதைய அரசு, உற்பத்தி சார்ந்த நுகர்வு முறைமையை நோக்கிப் பயணிக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்வதும் கடினமானதே.

எரிபொருள் விலைகள் சர்வதேச சந்தையில் குறையும்போது, அதன் பிரதிபலன்களை மக்களுக்கு வழங்க மறந்துவிடும் அரசு, மசகு எண்ணை விலையேறும்போது சற்றும் சுணங்காது மக்கள் தலைகளில் அதன் தாக்கங்களைக் கட்டியடித்து விடுகின்றது. இலங்கையில் இப்போதுள்ள சூழ்நிலையில் கொவிட் தொற்று நிலைமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் இந்த விலையேற்றம் மக்களின் வயிற்றில் பேரடி அடிக்கும் என்பதில் ஐயமில்லை.

“ஆடத் தெரியாதவள் மேடை கோணல்” என்று கூறினாளாம் என்பது போல் சாக்குப்போக்குகளைக் கூறி, எப்போதோ நடக்கப் போகின்றவற்றை “படம்” காட்டி, உணர்ச்சிபூர்வமாகப் பேசி தகிடுதத்தங்கள் செய்யாது மக்களின் நிலையுணர்ந்து, அவர்களின் வயிற்றில் அடிக்காது அரசு செயற்பட வேண்டும். இதை அதிகாரத்தில் உள்ளவர்கள் உணராவிட்டால், மக்கள் சரியான நேரத்தில் அதை உணர்த்துவார்கள் என்பது திண்ணம்.




# கொவிட் விதிகளை மீறி வவுனியாவில் திருமணம்

## மணமக்கள் உள்ளிட்ட பலர் தனிமைப்படுத்தலில்

**வவுனியா, ஜூன் 15**

**வவுனியா தவசிகுளத்தில் கொரோனா விதிமுறைகளை மீறி திருமண நிகழ்வு நடத்தப்பட்டதையடுத்து மணமக்கள் உள்ளிட்ட பலர் தனிமைப்படுத்தப்பட்டனர். திருமண நிகழ்வில் கலந்துகொண்டவர்களை தேடும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் குறித்த திருமண நிகழ்வை 15 பேருடன் நடத்துமாறு சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தனர். எனினும் குறித்த திருமண நிகழ்வுக்கு 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து திருமண வீட்டுக்குச் சென்ற சுகாதார பிரிவினர் எச்சரிக்கை வழங்கியிருந்தனர்.

எனினும் தொடர்ச்சியாக சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்ட மணமக்கள் உட்பட அவரின் வீட்டார் நேற்று மாலை சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் திருமண நிகழ்வின் கலந்துகொண்ட படப்பிடிப்பாளரின் உதவியுடன் கலந்துகொண்டவர்களை அடையாளம் கண்டு அவர்களையும் சுயதனிமைப்படுத்தல் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றபோதிலும் மக்கள் பொறுப்பற்றதனத்துடன் இவ்வாறான விழாக்களை முன்னெடுக்கின்றமை அதிகம் இடம்பெற்று வருகின்றது. வடமராட்சியிலும் நேற்றுமுன்தினம் இவ்வாறு திருமண நிகழ்வொன்று இடம்பெற்று அதில் கலந்துகொண்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

# ஆள்களற்ற வீடுகளில் சமூகச் சீர்கேடுகள்!

## கட்டுப்படுத்துமாறு மாதர் சங்கங்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆள்கள் அற்ற வீடுகள் சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் சமூகச் சீர்கேடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன என்று மாதர் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சங்க உறுப்பினர்கள் மேலும் தெரிவிக்கையில்:

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட வீடுகளில் 250க்கும் மேற்பட்டவற்றில் குடும்பங்கள் வசிக்கவில்லை. ஆள்கள் அற்ற வீடுகள் தொடர்பாக கிராம அலுவலர்கள் ஊடாக தகவல் திரட்டப்பட்டு மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டன.

இந்த வீடுகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத செயறபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் கடந்த காலங்களில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் குறித்த வீடுகளை வேறு பயனாளிகளுக்கு வழங்குங்கள் என்ற கோரிக்கைகூட விடுக்கப்பட்டது.

தற்போது பயணத் தடைகளைப் பயன்படுத்தி குறித்த வீடுகளில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குறிப்பாக குழுவாக போதைப்பொருள்கள் பயன்படுத்துதல், கசிப்பு உற்பத்தி, கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுதல் போன்ற பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து விரைவில் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் குரல்வளையை பொலிஸார் நெரிக்கமுடியாது

## சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜூன் 15

**போலிச்செய்திகளைப் பதிவிடுவோர் அல்லது பகிர்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து, பொதுமக்களுக்குள்ள கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை, பொலிஸார் நெரிக்க இடமளிக்க முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா நடவடிக்கைகளைத் தடுக்கும், ஒற்றுமையின்மை மற்றும் வெறுப்பு ஆகியவற்றைத் தோற்றுவிக்கும் போலிச்செய்திகள், புகைப்படங்கள், காணொலிகள் பகிரல் எனும் தலைப்பிடப்பட்டு, அண்மையில் பொலிஸார் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையின்படி, போலிச் செய்திகளைப் பரப்புவோர் கைது செய்யப்படுவர் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அவதூறு, வன்முறை தூண்டல்களுடன் தொடர்பில், சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எந்தவிதமான ஆட்சேபனைகளும் இல்லை.

பொதுமக்கள் தங்களது அபிப்பிராயங்கள், விமர்சனங்களை கண்ணியமாக வெளிப்படுத்தும் போது, அவர்களின் குரல்வளையை நெரிப்பதற்காக, அத்தகைய சட்டங்களை அதிகாரிகள் பயன்படுத்தாதிருப்பதை உறுதிசெய்வது, முக்கிய மான ஒன்று.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சு, கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் குரல்வளையை நெரிப்பதற்காக பொலிஸாரால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை, சில பொலிஸ் அதிகாரிகள், துஷ்பிரயோகப்படுத்தலாம்.

நாட்டு மக்களின் பேச்சுச் சுதந்திரம், கருத்துகளை வெளிப்படுத்தும் சுதந்திரம், அபிப்பிராயங்களை மறுப்பதற்கான சுதந்திரம் ஆகிய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

போலிச்செய்திகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை முழுமையாக விசாரிப்பதற்கு முன்னரே, 'போலிச்செய்தி' எனப்படும் குற்றத்துக்காக எந்தவொரு நபரும் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றுள்ளது. (எ-4)

## இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால், இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட, குருவிட்ட, கிரியெல்ல மற்றும் அயகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெரணியகல, வரக்காபொல, தெஹியோவிட்ட மற்றும் புளத்கொஹூபிட்டிய, அரநாயக்க, கேகாலை, யட்டியந்தோட்டை, ருவன்வெல்ல, மாவனெல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்ட ஆய்வு நிறுவகத்தின் புவி சரிதவியல் நிபுணர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேல், மத்திய, சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் சில கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கலாம். அதனால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-4)

## இலங்கைத் தேயிலையின் கேள்விக்கு திடீர் வீழ்ச்சி!

### மஹிந்தானந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

இலங்கைத் தேயிலை உலக சந்தையில் நான்காவது இடத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இது இரசாயன உரத்தால் ஏற்பட்ட விளைவு என்று கருத முடியாது. தற்போதும் தேயிலை உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, இரசாயன உரம் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண கொரோனா ஒழிப்பு செயற்குழுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் முழுவதும் உர மாபியாக்கள் செயற்படுகின்றன. வருடாந்தம் இது தொடர்பில் 100 மில்லியன் கொடுக்கல் வாங்கல் எமது நாட்டிலும் இடம்பெறுகின்றன. இந்த மாபியாக்களை அழிப்பது இலகுவான விடயம் அல்ல. விவசாய உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தேவையற்ற விதத்தில் உரத்தைக் கொள்வனவு செய்வதால், சில பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இலங்கையில் 76 வீத விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எந்தவொரு விவசாயியும் தமக்கு இரசாயன உரம் தேவையென்று தெரிவித்து, எவ்வித எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை- என்றார். (எ-4)

## பேர்ள் கப்பல் விபத்து

# கடல் உயிரினங்களின் இறப்புக்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால், கடல்வாழ் உயிரினங்களின் உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ளன என்று வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார தெரிவிக்கையில்,

இலங்கையின் மேற்கு மற்றும் தெற்கு கடற்கரை ஓரங்களில் தொடர்ச்சியாக கடல் வாழ் உயிரினங்கள் இறந்து கரையொதுங்கி வருகின்றன. கடந்த இரண்டு வாரங்களில் 23 கடலாமைகள், 5 டொல்பின் மீன்கள் கரையொதுங்கியுள்ளன.

பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக கடலில் கலந்த பல தொன் நிறை கொண்ட இரசாயனங்கள் காரணமாக, இவ்வாறு கடல் வாழ் உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்குகின்றனவா என்ற கோணத்தில் வன ஜீவராசிகள் திணைக்களம் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கரையொதுங்கிய உயிரினங்களின் மாதிரிகளை பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருக வைத்தியபீடத்துக்கும், அத்திட்டிய மிருக வைத்திய பகுப்பாய்வு நிலையத்துக்கும் அனுப்பி, இரசாயனத் தாக்கம் தொடர்பில் உறுதிப்படுத்த வன ஜீவராசிகள் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் இதுவரை கடலாமைகளின் உயிரிழப்புக்கு என்ன காரணம் என்று கண்டறியப்படவில்லை - என்றார். (எ-4)

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுக

கொழும்பு, ஜூன் 15

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேவேளை பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்ட பணிக்குழாமைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரின் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பரீட்சை நிறைவடைந்து 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், பரீட்சைக் கடமைக் கொடுப்பனவை கல்வி அமைச்சு இதுவரையில் வழங்கவில்லை.

இதன் காரணமாக பரீட்சைக் கடமைகள் மற்றும் விடைத்தாள் திருத்தப் பணிகளில் ஈடுபட்டவர்கள் பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-4)

## 9,883 மீனவர்களுக்கு ரூ.5,000 கொடுப்பனவு

கொழும்பு, ஜூன் 15

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால், பாதிக்கப்பட்ட 9 ஆயிரத்து 883 மீனவர்களுக்கு, 5 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று கம்பஹா மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, பஸ் கட்டணங்கள் எந்தக் காரணத்துக்காகவும் அதிகரிக்கப்படமாட்டாது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.



இதேவேளை எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பஸ் பயணச்சீட்டு விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கோரிக்கை விடுத்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக் கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட வாய்ப்புகள்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

நாட்டில் நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடு இன்னும் சில காலத்துக்கு நீடிக்கப்படும் வாய்ப்புள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விசேட மருத்துவ நிபுணர்களின் தீர்மானங்களுக்கு அமைவாக, பயணத்தடையைத் தொடர்வதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். பயணத் தடையின் காரணமாக கொரோனாவால் உயிரிழப்புக்களும், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளன. எனினும் இது பெரியளவிலான மாற்றமில்லை.

எனவே பயணத் தடையை மேலும் சில நாள்களுக்கு நீடிப்பது என்ற தீர்மானமே தற்போதைக்கு உள்ளது. தினமும் இது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். விசேட மருத்துவ நிபுணர்களின் தீர்மானங்களுக்கு அமையவே முடிவுகள் எடுக்கப்படும் - என்றார். (ஏ-4)

# இலங்கையர்களுக்கு பஹ்ரைனில் தடை!

கொழும்பு, ஜூன் 15

பஹ்ரைனில், இலங்கையர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளுக்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால், சிவப்புப் பட்டியலில் உள்ள நாடுகளுக்கே வேலைவாய்ப்புக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளில் உள்ள பஹ்ரைன் நாட்டுப் பிரஜைகளுக்கு இந்தத் தடை செல்லுபடியாகாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-4)

# பாடசாலைகளை மீளஆரம்பிக்க மருத்துவர்களிடம் ஆலோசனை!

## பிரதமர் பணிப்பு



கொழும்பு, ஜூன் 15

கொரோனாத் தொற்று காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, குழந்தை மருத்துவ நோய்கள் தொடர்பான சிறப்பு மருத்துவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான கூட்டத்தில் இந்த ஆலோசனையைத் தெரிவித்தார்.

அதேவேளை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னர் 11 முதல் 13ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது மிக முக்கியமானது. அத்துடன் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி செலுத்துவதும் முக்கியம் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். (ஏ-4)

# சிறைக்கைதிகளுக்கு தடுப்பூசி: இன்னமும் தீர்மானமில்லை



கொழும்பு, ஜூன் 15

சிறைச்சாலைகளில் தடுப்பிலுள்ள கைதிகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு, இதுவரையில் எவ்வித தமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கைதிகளுக்கும் கொரோனாத் தொற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனடிப்படையில் தொற்றுக்குள்ளானவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் பலருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டபோதும், இதுவரையில் தொற்றுக்குள்ளாகிய எவரும் உயிரிழக்கவில்லை. அதேவேளை சிறைச்சாலைகளின் அதிகாரிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)

# குறைந்த ஊழியர்களையே கடமைக்கு அழையுங்கள்!

## அரச, தனியார் நிறுவனங்களுக்கு அறிவுறுத்து



கொழும்பு, ஜூன் 15

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஊழியர்களை மாத்திரம் கடமைக்கு அழைக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

தேவையற்ற விதத்தில் அதிகமான ஊழியர்களை சேவைக்கு அழைப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும், அவர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை பிரதேச செயலாளர்களின் அனுமதி இல்லாமல் திறக்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சில வர்த்தக நிலையங்களை மட்டுமே திறப்பதற்கு பிரதேச செயலகங்கள் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளன. எனினும் பல்வேறு பிரதேசங்களில் அனுமதி பெற்றுக்கொள்ளாது அதிக வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)



# 1,198 பேர் கைது

கொழும்பு, ஜூன் 15

கொரோனாத் தொற்றுக் கால தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் ஆயிரத்து 198 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-4)

# ஆபத்தான வைரஸ்க்களை கண்டறிய மீண்டும் சோதனை



கொழும்பு, ஜூன் 15


ஆபத்தான கொரோனா வைரஸ்க்களைக் கண்டறியும் சோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறிஜெயவர்தனபுர பல்கலைக்கழக நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறை மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட 16 மாதிரிகள் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. இந்த ஆய்வுகளின் முடிவுகள் எதிர்வரும் 18ஆம் திகதிக்குள் வெளியிடப்படும். குறித்த மாதிரிகள் மரபணு வரிசைமுறை சோதனைகளுக்கு அனுப்பப்படும். அத்துடன் ஆபத்தான கொரோனா வைரஸை இனங்காண்பது தொடர்பான சோதனைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க ஜெயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடம் முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரிட்டனில் பரவலாகக் காணப்படும் ஆபத்தான அல்பா வைரஸ் இலங்கையில் 10 பகுதிகளிலும், இந்தியாவின் டெல்டா வைரஸ் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ-4)

# கொரோனா பெருந்தொற்று

# 60 வயதைக் கடந்தோரின் இறப்பு விகிதம் அதிகம்!



கொழும்பு, ஜூன் 15

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரில் 70 வீதமானவர்கள் 60 வயதைக் கடந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் 25 வீதமானோருக்கு ஏனைய நோய்களும் இருந்துள்ளன. 60 வயதைக் கடந்தவர்களிலும் பலர் பல்வேறு நோய்களைக் கொண்டிருந்தனர் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஏ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளைப் பாதுகாக்க புதிய பயங்கரவாத தடைச்சட்டம்

## ஐ.ம.சக்தி வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 15**

**நாட்டின் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில், புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ன தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் பொதுமக்களுக்கும், சிறுபான்மை சமூகத்தினருக்கும் எதிராக பயன்படுத்தப்படுவதால், சிவில் சுதந்திரம் குறைவடைகின்றது. எனவே அரசு புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உருவாக்குவதற்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சி தயார்.

ஜனநாயகத்தை விட்டுக் கொடுக்காமல் வலுவான தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்கலாம். புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தேசத்தின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது வெளிப்படையான விடயம்.

தேசிய சட்ட ஆணைக்குழுவின் நகல் வடிவை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்ப புள்ளியாகக் கருதுகின்றது. அரசு சிறுபான்மையினத்தவர்களை இலக்கு வைத்துள்ளது. இதனால் சிறுபான்மையினத்தவர்கள் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். போலிச் செய்திகள் என்ற போர்வையில் தற்போது ஊடகங்களும், சமூக ஊடகங்களும் இலக்கு வைக்கப்படுகின்றன - என்றார். (எ-4)

# ஏப்.21 தாக்குதலுடன் தொடர்பெனக் கூறி பண மோசடி

கொழும்பு,ஜூன் 15

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்பென்று அச்சுறுத்தி, பெண்ணொருவரிடம் பண மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வெயங்கொட பகுதியில் பதிவாகியுள்ளது.

வெயங்கொட மாலிதென்ன பகுதியில் உள்ள பெண்ணொருவரின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்திய சந்தேகநபரொருவர், ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் தொலைபேசி இலக்கங்களுடன் உங்களது இலக்கமும் உள்ளது என்று குறித்த பெண்ணை அச்சுறுத்தியுள்ளார்.

மிரிஹான பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி என்று தன்னை அடையாளப்படுத்திய சந்தேகநபர், அவரிடம் பண மோசடியையும் மேற்கொண்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வெயங்கொட பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைவாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)



# அசாத் சாலி மீதான விசாரணை நிறைவு

கொழும்பு, ஜூன் 15

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியால் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

ஷரீஆ சட்டம் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி அசாத் சாலி சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அதனையடுத்து கடந்த மார்ச் 16ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் தனது வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது பங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், அவர் கைதுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து அவர் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

# தென்கொரியாவில் இலங்கையர் அவதி

கொழும்பு, ஜூன் 15

தென்கொரியாவுக்கு தொழில் வாய்ப்புக்காகச் சென்றுள்ள இலங்கையர்கள், விசாக்காலம் முடிவடைந்துள்ளதால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் தென்கொரியாவிலுள்ள பல இலங்கையர்கள் தங்களது வேலையை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

அதேவேளை விசா இல்லாமல் தென்கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களை உடனடியாக நாட்டுக்கு திருப்பி அழைக்குமாறு, தென்கொரிய அரசு இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்யப்பட்டு விசாக்காலம் காலாவதியான நிலையில் சுமார் 2 ஆயிரம் தொழிலாளர்கள் இந்த அவலத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# மக்கள் பொறுமையிழந்தால் வீதியில் இறங்க நேரிடும்!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 15

தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பை சம்பாதித்து வரும் அரசு, அவர்களின் பொறுமையுடன் விளையாடுகின்றது. அவர்கள் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழும் நிலைமையே உருவாக்குகின்றது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவிக்கையில்,

கடும் சுமைகளை சுமத்தியுள்ள அரசுக்கு எதிராக மக்கள் விரைவில் வீதிகளில் இறங்குவர். பொறுமை இழந்து அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவர். தற்போதைய நிலை தொடர்ந்தால், கொரோனாவையும் பொருட்படுத்தாமல் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு மக்கள் வீதிகளில் இறங்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதனால் அரசு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (எ-4)

# வாகன இறக்குமதியை கைவிட்டு மக்களின் நலனைக் கவனியுங்கள்

## எதிர்க்கட்சி அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஜூன் 15

அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் தீர்மானத்தை உடனடியாகக் கைவிட்டு, அந்தப் பணத்தை கொரோனா ஒழிப்பு உள்ளிட்ட மக்கள் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

மக்களின் வரிப்பணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்கும் பிரேரணையை நிராகரிக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்தல் போன்ற மக்கள் விரோத செயற்பாடுகளை பொறுப்புமிக்க எதிர்க்கட்சி பார்த்துக்கொண்டிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-4)

# சமையல் எரிவாயு விலை அதிகரிக்காது



கொழும்பு, ஜூன் 15

சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க அரசு தீர்மானிக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு விலை தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, உரிய தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# சிறைக்குள் வீசப்பட்ட ஹெரோய்ன் பொதி

கொழும்பு, ஜூன் 15

களுத்துறை சிறைச்சாலைச் சுவருக்கு மேலாக வீசப்பட்ட ஹெரோய்ன் அடங்கிய பொதியொன்று சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று மீட்கப்பட்டது.

குறித்த பொதிக்குள் 19 கிராம் எடையுள்ள 16 ஹெரோய்ன் பொதிகள் இருந்தன என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பொதி களுத்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலில் புதிய திருப்பம்

# நெத்தன்யாகு 'அவுட்' பிரதமராக பென்னட்

டெல்அவிவ், ஜூன் 15

**இஸ்ரேலில் நீண்டகாலமாக ஆட்சியமைத்திருந்த பெஞ்சமின் நெத்தன்யாகுவின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவியேற்றுக்கொண்டார்.**



2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு பதவி வகித்தார். பெஞ்சமின் நெத்தன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி புகார்கள் கடந்த சில வருடங்களாக எழுந்து வந்தன. அங்கு 2 ஆண்டுகளாக 4 முறை நாடாளுமன்ற தேர்தல் நடந்தும் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்க வில்லை.

கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி நடந்த தேர்தலில், மொத்தம் உள்ள 120 இடங்களில் பெஞ்சமின் நெத்தன்யாகு கட்சி 54 இடங்களைப் பிடித்தது. தனிப்பெரும் கட்சியாக வந்தபோதும் அவரால் கூட்டணி அரசு அமைக்க முடியவில்லை.

இதனால் இழுபறி நிலைமை நீடித்தது. அங்கு 8 எதிர்க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து கூட்டணி அமைத்தன. இஸ்ரேலில் அரபுக் கட்சி தலைமையில் 8 அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெத்தன்யாகுவின் ஆட்சிக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளன.

**நப்தாலி பென்னட்**

இந்தக் கூட்டணிக் கட்சிகள் சுழற்சி முறையில் பிரதமர் பதவியைப் பகிர்ந்துகொள்ள உள்ளன. இதன்படி வலதுசாரி கட்சியான யாமினா கட்சியின் தலைவர் நப்தாலி பென்னட் பிரதமராகப் பதவிஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் 12 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் யமினா கட்சித் தலைவர் நப்தாலி பெனட் வெற்றிபெற்றார். இதையடுத்து, இஸ்ரேலின் புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவி ஏற்றுக்கொண்டார். (ம)

## வாள்தூக்கி நின்னாபாரு சண்டைபோட எவனுமில்ல...



லண்டன், ஜூன் 15

ஜி7 கூட்டமைப்பின் 47ஆவது உச்சி மாநாடு, பிரிட்டனின் கார்ன்வால் நகரில் நடைபெற்றுவருகிறது. இந்த நிகழ்வில் இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத்தும் கலந்துகொண்டார். மாநாட்டுக்கு இடையில் ராணி எலிசபெத்தின் 'கேக்' வெட்டும் நிகழ்வும் நடைபெற்றது. இதில் வாள் ஒன்றைப் பயன்படுத்தி ராணி கேக் வெட்டியமை சுவாரஸ்யம்மிக்கதாக மாறியுள்ளது. ராணி எலிசபெத்தின் கணவர் பிலிப் அண்மையில் காலமானார். அவரது மறைவுக்குப் பிறகு, குடும்பத்துடன் இங்கிலாந்து ராணி கலந்துகொள்ளும் முதல் நிகழ்வு இதுவாகும். ராணியின் பிறந்த தினம் ஏப்ரல் மாதமாகும். பிலிப் மறைந்த காரணத்தால் அப்போது பிறந்தநாள் கொண்டாடப்படவில்லை. தற்போது கேக் வெட்டும் வைபவம் இடம்பெற்றுள்ளது. (ம)

# சீனாவுக்குப் போட்டியாக வருகின்றன திட்டங்கள்!

ஜி7 மாநாட்டில் அதிரடி




லண்டன், ஜூன் 15

சீனாவின் திடீர் வளர்ச்சி சர்வதேச அரசியலை புரட்டிப்போடும் அளவுக்கு மாற்றியுள்ள நிலையில், சீனாவுக்குப் போட்டியாக பல திட்டங்களை நடைமுறைப்படுத்த ஜி7 மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெல்ட் அண்ட் ரோட் இனிஷியேட்டிவ் என்ற திட்டத்தின் கீழ் பல நாடுகளுக்கு ரயில் பாதைகள், சாலைகள் மற்றும் துறைமுகங்கள் போன்றன கட்ட அவற்றுக்கு பொருளாதார ரீதியாக சீனா உதவிசெய்து வருகிறது. ஆனால், இதனால் சில நாடுகள் அதிக கடன் சுமைக்கு ஆளாகும் சூழல் உருவாகுகிறது என விமர்சிக்கப்படுகிறது. எனவே, அதற்கு போட்டியாகவே ஜி7 தலைவர்கள் புதிய திட்டத்தை கொண்டுவர முடிவுசெய்துள்ளனர். (ம)

நீத்தார் நயப்புரை

# அமரர் சின்னையா ஞானசந்திரமூர்த்தி

## கல்வியிலும் ஆன்மிகமும் இரு கண்ணென வாழ்ந்தவர்

குடும்பமே கோயில் என்றும் சீரிய மாணவ சமுதாயத்தை உருவாக்குதலே ஆசிரியப் பணி என்றும் ஆன்மிக வழியிலேதான் சமுதாய மேம்பாட்டைக் கட்டியெழுப்பலாம் என்றும் வாழ்ந்த இலட்சிய புருஷர்தான் அமரர் சின்னையா ஞானசந்திரமூர்த்தி.

அமரர் சி.ஞானசந்திரமூர்த்தி அமரத்துவம் அடைந்து ஒரு மாதம் நிறைவுபெற்ற நிலையில் அவரின் வாழ்க்கைப்போக்கையும் அவர் மாணவ சமுதாயத்துக்கு ஆற்றியசேவையையும் ஆன்மீக நெறியில் சமூக மேம்பாடுபெற அவர் ஆற்றிய பணிகள் பற்றியும் அறிந்திருப்பது பயனுடையதாகும். சுழிபுரம் பண்ணாகம் கிராமத்தில் திரு.திருமதி சின்னையா மாரிமுத்து தம்பதியினருக்கு 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதியில் பிறந்தவர் தான் அமரர் சி.ஞானசந்திரமூர்த்தி. 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்' எனும் வள்ளுவர் வாக்குக்கு இணங்க தந்தைக்கு பெருமை சேர்த்த பெருமைக்குரிய மகனாக செயற்பட்டவர்.

கல்வியும் கற்பித்தலும் தனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் உயர் தரக்கல்வியையும் யாழ் விக்ரோறியாக் கல்லூரியில் பெற்றுக்கொண் டார். திறமையுள்ள பண்பான மாணவனாக விளங்கியமையால் ஆசிரியர்களின் நன் மதிப்புக்குரிய மாணவனாகத் திகழ்ந்தார். விக்ரோறியாக் கல்லூரியில் தனது கற்கை நெறியை நிறைவுசெய்தவுடன் ஆசிரிய பரீட்சைக்கு தோற்றி நியமனம் பெற்றார்.

தனது முதல் நியமனத்தைதான் கற்ற பாடசாலையில் பெற்று திறமையாக கற்பித்துப் பாராட்டைப் பெற்றவர். பின் பயிற்றப்பட்ட ஆசிரியராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்பித்து மாணவர்களதும் ஆசிரியர்களதும் நன்மதிப்பை பெற்றார். இவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிபுலமை மிக்கவர் ஆங்கிலத்தை மாணவர்கள் சரியான முறையில் கற்றுக்கொள்ளும் வகையில் இவருடைய கற்பித்தல் வாண்மை சிறப்புடையதாக இருந்தது. முப்பத்தைந்து ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்த அமரர் காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்றனர் என்று சொல்வதிலும் பார்க்க ஆயிரக்கணக்கானவர்களை நன்மாணாக்கராக மேம்பாடுடைய மனிதர்களாக்கிய பெருமைக்குரியவர் அமரர் என்று சொல்வது பொருத்தமானதாகும்.

**ஆன்மிகப் பணி**

மேடைக்கும் மாலைக்கும் ஆசைப்படாது சேவையின் மூலம் திருப்தி பெறும் ஒரு தொண்டனே அமரர். அமரருடன் வாழ்வுடன் இரண்டற கலந்ததுதான் வழக்கம்பரை அம்மன் வழிபாடு. தொல்புரம் வழக்கம்பரை ஆலய நிர்வாகத்தால் இவரை என்றும் மறந்துவிட முடியாது.



இவருக்கும் இவ்வாலய அம்மனை என்றும் நினைக்காது இருக்க முடியாது. இவ்வாலயம் மூலமாக மக்களின் ஆன்மிக மேம்பாட்டை வளரத் தெடுக்க பெரிதும் முயன்றவர் அமரர். அவர் ஓர் தன்னம்பிக்கை உள்ள அறிஞனாக இருந்தாலும் தெய்வ நம்பிக்கையுடன் இணைந்த இவருடைய வாழ்க்கை மக்களை ஆன்மிக நிலைப் படுத்துபவை. போலித்தனமற்ற இவருடைய இலட்சிய வாழ்க்கை மக்களால் விதந்து கூறப்படுவது.

**நிர்வாகத்தினர்**
வழக்கம்பரை முத்துமாரி,
அம்மன் அறக்கொடை நிதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்று தகவல்கள் தாமதம்

ஒப்புக்கொள்கிறார் இராணுவத்தளபதி



**கொழும்பு, ஜூன் 15**

**கொரோனாத் தொற்று தொடர்பான தகவல்கள் பரிமாற்றத்தில் தாமதம் உள்ளமை உண்மை. எனவே சுகாதார நிர்வாகிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளை விரைவுபடுத்தப்படவேண்டும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

தொற்று நோயியல் நிபுணர்கள், சுகாதார நிபுணர்கள், நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்கள் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற பணிக்குழு அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினரின் திறன் மற்றும் தொழில் முறைத்திறன்களை நன்கு அறிந்து, ஜனாதிபதியின் உத்தரவின் கீழ், கொவிட்-19 கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக இராணுவம் மற்றும் சேவைப்பணியாளர்கள் சுகாதார நிபுணர்களுக்கு உதவும் முகமாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதாரப் பணிகளில் அனைத்து நேரங்களிலும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படும் இந்த உதவியை குறுக்கீடு என்று தவறாகப் புரிந்துகொள்ளவோ அல்லது தவறாக விளங்கிக்கொள்ளவோ கூடாது. கொரோனாத் தொற்றை இனங்காணல், இறப்புக்களின் எண்ணிக்கை வித்தியாசம் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் ஆகியவை அனைத்து நேரங்களிலும் ஒத்திசைவானவை அல்ல. அவை காலங்கடந்தவையாக காணப்படுகின்றன. அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பொது மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக கடந்த 3 வாரங்களில் ஏற்பட்ட இறப்புகள் தொடர்பான அறிக்கைகள் ஒரு சிக்கலான விம்பத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும் இதுபோன்ற தகவல்களை விரைவாக சென்றடையச் செய்வதற்கான உத்திகளின் அவசியத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

நிபுணர்களுடனான விரிவான கலந்துரையாடல்கள் மற்றும் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் அனைத்து இலங்கையர்களின் நலனுக்காக பயணக் கட்டுப்பாடுகளை நீடிப்பதற்கு ஜனாதிபதி முடிவுசெய்தார். இந்த நாடு ஒரு சிறிய பொருளாதாரம் கொண்ட வளரும் நாடு என்பதால் நாட்டை தொடர்ச்சியாக மூடவும் முடியாது.

பி.சி.ஆர். சோதனைகள், விரைவான அன்டிஜன் சோதனைகள், நோயாளிகளை வெளியேற்றுவது, ஆய்வக செயல்முறை, இறப்பு அறிக்கை, சட்ட செயல்முறை, தரவுப்பரிமாற்றம், தடுப்பூசி, தொற்று விகிதங்கள் போன்றவற்றில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்- என்றார். (எ-4)

## கொரோனா இறப்புக்கள் அறிக்கையிடல் மாற்றம்

கொழும்பு, ஜூன் 15

கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்புக்களை அறிவிக்கும் நடைமுறையில் நேற்று முதல் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக கொரோனாவால் இறப்புக்கள் பதிவானால், அது தொடர்பான விவரங்கள் 24 அல்லது 48 மணித்தியாலத்துக்குள் வெளியிடப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதைய விபரங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்பட்டு வருகின்றது. எனினும், பல நாள்களுக்கு முன்னர் நிகழ்ந்த இறப்புக்களின் தொகுப்பாகவே அவை இருக்கின்றன.

இந்த நிலையிலேயே கொரோனாவால் இறப்பு நிகழ்ந்தால், அது தொடர்பான அறிவித்தலை 24 அல்லது 48 மணித்தியாலத்துக்குள் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-4,44)

## கறவை மாட்டைத் திருடி இறைச்சியாக்கிய விசமிகள்

உருத்திரபுரம் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நல்லின பசுமாட்டை களவாடி வெட்டி இறைச்சியாக்கியுள்ளனர் என்று மாட்டின் உரிமையாளர் கவலை தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வாதாரமாக வளர்க்கும் கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சியாக்கும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன.


இந்தநிலையில், நேற்றுமுன்தினமும் உருத்திரபுரம் 10ஆம் வாய்க்கால் பகுதியில் வீட்டில் கட்டிவிடப்பட்ட பால் தரும் உயர் ரக பசுமாடு களவாடப்பட்டு உருத்திரபுரம் பொதுமயானத்துக்கு அருகிலுள்ள பாழடைந்த கட்டடத்துக்குள் இறைச்சியாக்கிவிட்டு பசுவின் தலை மற்றும் தோல்களை அந்த இடத்திலேயே விட்டுச்சென்றுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (த-214)



## தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை கலப்பாக பயன்படுத்த திட்டம்!

கொழும்பு, ஜூன் 15

கொரோனாத் தடுப்பூசிகளுக்கு உலக நாடுகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், உடனடித் தீர்வாக வெவ்வேறு வகையான தடுப்பூசிகளை கலந்து பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.




அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றுக் கொண்டவர்களுக்கு, இரண்டாவது டோஸாக அமெரிக்காவின் பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது மிகவும் பாதுகாப்பானது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலோபாய முகாமைத்துவம் தொடர்பான பிரதானி அலெஜன்ட்ரோ க்ராவியோடோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய ஆய்வுகளில், இந்த தடுப்பூசிக் கலவை மற்றும் பொருத்தப்பாடு என்பவை நன்மை பயக்கும் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அஸ்ராஜெனகாவின் முதல் தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு பைஸர் தடுப்பூசியை இரண்டாவது செலுத்துகையாக இணைத்துச் செலுத்துவது வைரஸுக்கு எதிரான பாதுகாப்பின் அளவை இரட்டிப்பாக்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது செலுத்துகையாக பைஸர் தடுப்பூசியை செலுத்தியதன் பின்னர் செயல்திறன் அளவு 97 வீதமாகக் காணப்படும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கலவை பாதுகாப்பானது மற்றும் செயற்திறன் மிக்கது என்பதை நிரூபிக்கப் போதுமான சான்றுகள் இருந்தாலும், தற்போது உலகம் நாடுகளில் கிடைக்கக்கூடிய ஏனைய தடுப்பூசிகளை வேறு தடுப்பூசிகளுடன் இணைப்பது தொடர்பான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை- என்றார். (எ-4)

## இயந்திரத்தினுள் கை அகப்பட்டு தொழிற்சாலை ஊழியர் காயம்!

கொடிகாமம், ஜூன் 15

தும்படிக்கும் இயந்திரத்தினுள் தும்பு போடும்போது, இயந்திரத்துக்குள் கை அகப்பட்டு பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பெருங்குளம் சாவகச்சேரியை சேர்ந்த 46 வயதுடைய பெண்ணொருவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-159)

## மட்டுவில் மோகனதாஸ் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன் 15

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட மட்டுவில் மோகனதாஸ் வீதி ஐ ரோட் வேலைத் திட்டத்தில் தார்க்கலவை வீதியாக புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

நுணாவில் கனகம்புளியடி வீதியில் மோகனதாஸ் சனசமூக நிலையத்துக்கு அருகில் ஆரம்பமாகி கனகன்புளியடி - புத்தூர் வீதியில் உள்ள முத்துமாரி அம்பாள் கோவில் வரையான ஆயிரத்து ஐநூறு மீற்றர் தூரம் புனரமைக்கப்படவுள்ளது.

மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து 2016 ஆம் ஆண்டு ஐ ரோட் வேலைத்திட்டத்தில் புனரமைக்கபபடவுள்ளது என அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் சீன நிறுவனமான சீரா வீதி புனரமைப்பு நிறுவனத்தால், தார்க்கலவை வீதியாக புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உரம் வழங்காமையால் விவசாயிகள் பாதிப்பு!

## விரைந்து பெற்றுத்தருமாறு கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 15**

**கமநல சேவை நிலையத்தால் முழுமையாக உரம் வழங்கப்படாமையால் விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு குமுளமுனை விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

சிறுபோக நெற்செய்கை தொடங்கி ஐம்பது நாள்கள் கடந்த நிலையிலும் உரத்தை விசிற முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். தனியார் கடைகளில்கூட உரங்கள் முடிவடைந்து விட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு உரங்கள் இருந்தாலும் கூடுதலான விலையிலேயே உரத்தை வாங்க வேண்டியுள்ளது.

உரங்கள் பயிர்களுக்கு விசிறப்படாததன் காரணமாக நெற்செய்கையில் நோய்த் தாக்கம் காணப்படுகின்றது. இதனால் அதிகரித்த விலையில் மருந்துகள் வாங்கி பயன்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் - என்றனர்.

இவ்விடயம் தொடர்பாக குமுழமுனை கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சயேந்திரன் தெரிவிக்கையில்;

'தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 700 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆயிரத்து 500 ஏக்கருக்கு உரம் வழங்கப்பட்டு விட்டது. ஆயிரத்து 200 ஏக்கருக்கு உரம் வழங்கப்பட வேண்டி உள்ளது. உரம் தற்போது சேமிப்பில் இல்லை. களஞ்சிய வசதிகள் இருந்திருக்குமானால் கூடுதலான உரங்களை சேமித்து வைத்து இருக்க முடியும். உரங்களை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றோம்' - என்றார். (ஐ-13)



# இடிக்கப்பட்ட கோவில் மீளக்கட்டப்படுகிறது

*இடித்தழித்தார் என்று கூறப்படுபவர் முன்னுக்குப் பின் முரண் கதை*

கொடிகாமம், ஜன் 15

மிருசுவில் ஏ9 வீதியில் அமைந்திருந்த பிள்ளையார் கோவில் பயணத்தடை நடைமுறையிலுள்ள வேளையில் இடித்தழிக்கப்பட்ட நிலையில், அதனை மீளக்கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுமார் 300 வருடங்கள் பழமையான குறித்த பிள்ளையார் கோவில், கடந்த வாரம் டிப்பர் வாகனம் மூலமாக இடித்தழிக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், குறித்த டிப்பர் வாகனம் மீட்கப்பட்டது. அதன் சாரதி என்று கூறப்படும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணைகளின் போது, அவர் முன்னுக்குப்பின் முரணான தகவல்கள்ளைக் கூறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனால் அவர் தடுத்துவைத்து விசாரிக்கப் படுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# மண்ணகழ்வும் விற்பனையும் பொலிஸாரால் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 15

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து விற்பனைக்காக சேமித்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் வைத்து சந்தேக நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 18 கியூப் மணலை தருமபுரம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அவரை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-113)





# 44 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு,ஜூன் 15

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 44 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

நிக்சன் அறக்கட்டளை மற்றும் உறவுகளுக்கு கை கொடுப்போம் ஆகிய இரு அமைப்புக்களால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

உறவுகளுக்கு கை கொடுப்போம் அமைப்பால் வள்ளுவர்புரத்தில் 20 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

நிக்சன் அறக்கட்டளையால் புதுக்குடியிருப்பில் 5 குடும்பங்களுக்கும், வற்றாப்பளை மற்றும் முள்ளியவளையில் 11 குடும்பங்களுக்கும், ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பில் 3 குடும்பங்களுக்கும்,வள்ளுவர்புரத்தில் 6 குடும்பங்களுக்கும் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-13)

# குடிதண்ணீர் கிணற்றை துப்புரவுசெய்து தருக

*பழையமுறிகண்டி மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, ஜூன் 15

முல்லைத்தீவு பழையமுறிகண்டி கிராமத்தில் உள்ள குடிதண்ணீர்க் கிணற்றை இறைத்து துப்புரவு செய்துதருமாறு துணுக்காய் பிரதேச சபையிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

பழையமுறிகண்டி கிராமத்தில் 40 குடும்பங்கள் வாழ்கின்றன. இக்கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றது. பழையமுறிகண்டி குளத்தின் கீழ் நீண்ட காலமாக பொதுக் குடிதண்ணீர் கிணறு ஒன்று இறைத்து துப்புரவுசெய்யப்படாமல் உள்ளது. குறித்த கிணற்றை இறைத்து துப்புரவு செய்து தருமாறு துணுக்காய் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் கடந்த ஐந்தாண்டுகளாக குறித்த கிணறு துப்புரவுசெய்யப்படவில்லை. இதன் காரணமாக குடிதண்ணீரை நீண்ட தூரம் சென்றே மக்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

துணுக்காய் பிரதேச சபையால் ஆண்டுதோறும் வறட்சி காலங்களில் எட்டுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுவது வழமை. வறட்சியால் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் கிராமங்களில் ஒன்றாக துணுக்காய் - பழையமுறிகண்டி கிராமம் காணப்படுகின்றது. இந்த நிலையில் குறித்த கிணறு குடிதண்ணீருக்குரிய தண்ணீர் மூலகமாக காணப்படும் நிலையில் கிணற்றை துப்பரவு, செய்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-13)

# பயணத்தடைகள் காரணமாக பாலைப்பழ வியாபாரம் வீழ்ச்சி



கிளிநொச்சி, ஜூன் 15

பயணத்தடை காரணமாக பாலைப் பழங்களை விற்கமுடியாது பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சித்திரை, வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் பாலைப் பழங்கள் சந்தைகளில் கூடுதலாக விற்பனைசெய்யப்படும். இந்தக் காலங்களில் வியாபாரிகள் பாலைப்பழங்களை யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களுக்கும் விற்பனைக்காக எடுத்துச்செல்வார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலைப்பழம் கூடுதலாக விற்கப்படும் இடமாக திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயச்சூழல் காணப்படும். கிளிநொச்சி, பரந்தன் மற்றும் மாங்குளம் ஆகிய நகரங்களில் குறிப்பாக ஏ9 வீதியில் பாலைப் பழங்கள் விற்கப்படும். ஆனால் தற்போது பயணத் தடை நடைமுறையில் உள்ளதன் காரணமாக பாலைப் பழ வியாபாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன் காரணமாக பெரும் வருமானத்தை தருகின்ற மூன்று மாதத் தொழில் பெரும் வீழ்ச்சியை அடைந்துள்ளது என்று பாதிக்கப்பட்ட வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிராமங்களில் பாலைப்பழப் பாணி காய்ச்சுகின்ற செயற்பாடு தற்போது காணப்பட்டாலும் காடுகளுக்குச் செல்வதில் உள்ள தடைகள் காரணமாக பாலைப்பழங்களை பிடுங்கி பாணி காய்ச்சும் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ 13)

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** நாள் முழுவதும் சிறப்பாக அமைந்து புதிய நன்மை கைகூடும். அனுகூலமான சூழ்நிலை நிலவும். பரிசு ஒன்று காத்திருக்கிறது. வளைந்து கொடுத்து சிறப்படைவீர்கள்.

**இடபம்:** ஆவணங்களைப் பாது காப்பாக வைப்பது நல்லது. புது விஷ யங்களைக் கற்பீர்கள். பிள்ளை களால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் குழப்பம் வேண்டாம்.

**மிதுனம்:** நிலம் பற்றிய முக்கியமான வர்த்தகம் முடியும். உறவினர்களால் நலம் உண்டாகும். கனவு நனவாகும். உழைப் பின் மூலம் நினைத்த உயரத்தை எட்டுவீர்கள்.

**கடகம்:** பொது நலத்துக்காக உழைத்து கைதட்டல் பெறுவீர்கள். சொத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும். பேச்சில் கவனம் தேவை. சந்தோஷமான நாள்.

**சிம்மம்:** வளர்ச்சி காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் அமையும். பணி யாளர்களின் நிலை உயரும். சந்தோஷ மும் நிம்மதியும் மீளும். விசா தொடர்பான பிரச்சினை தீர்ந்து நிம்மதி ஏற்படும்.

**கன்னி:** முன்னேற்றம் காண்பீர்கள். சண்டை சச்சரவுகள் தீரும். துணிச்ச லான செயலில் ஈடுபாடு வரும். சாதனை செய்வீர்கள். சிறு உபாதை ஏற்பட்டு சிகிச்சையால் குணமடைவீர்கள்.

**துலாம்:** பிரச்சினைகள் தலைதூக்க நீங்கள் காரணமாக இருக்காதீர்கள். அலைச்சலும் செலவுகளும் சிறு களைப்பை ஏற்படுத்தும். தந்தையால் நன்மை உண்டு.

**விருச்சிகம்:** பொருளாதார நிலை ஏற்ற, இறக்கமாகவே இருக்கும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. நட்பு வட்டம் விரியும். உன்னிப்பாக செயற் பட்டு நஷ்டத்தை தவிர்ப்பீர்கள்.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்களை எண்ணி ஏமாற வேண்டாம். பணியா ளர்கள் யாருக்கும் ஜாமீன் கொடுக்க வேண்டாம். நட்பால் நன்மை ஏற்படும். சிறு சிறு பிரச்னைகள் விலகும்.

**மகரம்:** பண விஷயத்தில் நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். உடன்பிறந்த வர்களால் ஏற்பட்ட மன அமைதி நீங்கும். ஆன்மிக ஈடுபாட்டால் நிம்மதி யும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**கும்பம்:** பெண்களால் ஏற்பட்டிருந்த சங்கடங்கள் நீங்கும். துணிச்சலான நட வடிக்கையால் பிரச்சினையில் இருந்து மீளுவீர்கள்.

**மீனம்:** அலுவலக செயற்பாடுகளில் அதிக வேகம் வேண்டாம். விழிப்புணர்வு தேவை. கலைத்துறையில் ஈடுபாடு வரும். முன்னேற்றமான சூழ்நிலை உண்டு. உழைப்பால் நன்மை வரும்.




# ஒரே மாதத்தில் பாபநாசம் –2 படத்தை முடிக்க கமல் திட்டம்?

பாபநாசம் 2 படத்தை ஒரே மாதத்தில் நடித்து முடிக்க நடிகர் கமல்ஹாசன் திட் டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகி யுள்ளது.

மோகன் லால், மீனா நடிப்பில் கடந்த 2013ஆம் ஆண்டு வெளியான படம் திரிஷ்யம். இந்தப் படம் ரசிகர்கள் மத்தி யில் நல்ல வரவேற்பை பெற்றது.

திரிஷ்யம் படம் தமிழ், தெலுங்கு, இந்தி என மற்ற மொழிகளிலும் ரீமேக் செய் யப்பட்டு வசூலை குவித்தது.

தமிழில் கமல்ஹாசன் மற்றும் கவுதமி நடித்திருந்தனர். தமிழில் 'பாபநாசம்' என்ற பெயரில் இப்படம் வெளியானது. இந்த நிலையில் 'பாபநாசம் 2' படத்தை நடிகர் கமல்ஹாசன் ஒரு மாதத்தில் நடித்து முடித்து கொடுத்துவிடலாம் என்று திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

twitter.com/@manipmp

எதை எடுத்தாலும் ஒன்னை விட ஒன்னு அசிங்கமாதான் இருக்கும் உதாரணத்துக்கு செல்ஃபி

twitter.com/@prakasht_

நீ எந்தன் தொடர்பில்லாத போதும் அழிக்க மறந்த அலைபேசி எண்

twitter.com/weknowth

நிறுவனத்தில் என்னோடு ஒன்றாக வேலை செய்தவர் இன்று இல்லை. அடேய் கொரோனா

twitter.com/@ramesh


உயிர் முக்கியம் அத விட பணம் முக்கியம்...!!! # நடுத்தர குடும்பத் தலைவன்.






# சூரியனுக்கு 'குட்பை' சொல்லும் சீனா

## செயற்கை சூரியன் உருவாக்கம்



பூமியில் உயிரினங்க ளின் வாழ்வுக்கு ஆதார மாக இருப்பது சூரியன் என்றே கூறலாம். புது மைகளை ஆற்றுவ தில் கோடிக்கணக்கில் செலவிடத் துடிக்கும் நாடு சீனா. முன்னணி யில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விளைவுகள் சிந்திக்கா மல் முனைப்பு காட்டுவதில் இந்நாட்டுக்கு முக்கிய பங்கு உண்டு.

இதன் ஒருபகுதியாக செயற்கை சூரியனை ஒளிர வைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது சீனா. கடந்த 1999ஆம் ஆண்டு முதலே செயற்கை சூரியன் எனப்படும் டோக்கோமாக் பணியில் சீனா ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. சூரிய சக்தியானது அணுக்கரு இணைவு மூலம் உருவாகிறது. சூரியனின் மையப்பகுதி ஹைட்ரஜன் கருக்களை ஹீலிய மாக இணைப்பதன் மூலம் 15 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பமாகிறது.


சீனாவின் செயற்கை சூரியன் 160 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. சீனா வடிவமைத்த பரிசோத னையில் செயற்கை சூரியனின் சூப்பர் கண்டக்டிங் டோகோமாக் (ஈஸ்ட்) இணைவு சூரியனின் மைய வெப்பநிலையைவிட எட்டு மடங்கு எரிகிறது. சீன அறிவியல் அக்கடமியின் ஹெஃபி இன்ஸ்டிடியூட் ஆஃப் பிசிகல் சயின்ஸ் என்ற இடத்தில் அமைந்துள்ள இந்த செயற்கை சூரியன் மற்றும் நட்சத்திரங்கள் இயற்கையாக நிகழும் அணுக்கரு இணைவு முறையை செயற்கையாக பிரதிபலிக்கும் வகையில் வடிவமைத்துள்ளனர். 101 வினா டிகளுக்கு 120 மில்லியன் டிகிரி செல்சியஸ் பிளாஸ்மா வெப்பநிலையையும் 160 மில்லியன் செல்சிஸை 20 வினாடிகளுக்கும் நீடித்து சாதனை படைத் துள்ளது. எதிர்பார்த்த வெப்பநிலையை எட்டிய சீனா அடுத்ததாக இதை அதிக நேரம் நீட்டித்து வழங்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியது. அதன் படி தற்போது 101 வினாடிகளுக்கு 120 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையையும், 160 மில்லியன் செல்சிஸை 20 வினாடிகளுக்கும் நீடித்து சாதனை படைத்துள்ளது.

இரண்டு ஹைட்ரோஜன் அணுக்களை இணைத்து அதன்மூலம் உற்பத தியாகும் ஆற்றலை அணுக்கரு இணைவு என கூறுகிறோம். இதுபோன்ற நிகழ்வுகள் மூலமாகவே சூரியனில் ஒளி, வெப்பம் ஏற்படுகிறது. உயிரினங் களின் வாழ்வுக்கு ஆதாரமாக விளங்குகிறது. இதை செயற்கையாக உரு வாக்கி பல்வேறு முயற்சிகளை முன்னெடுக்கிறது சீனா.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நரியும் கழுதையும்

அது மழைக்காலம். கழுதைகளை மேய்க்க ஓட்டிச் சென்றான் அவற்றின் உரிமையாளன். சகதியில் மாட்டிக் கொண்டது வயதான கழுதை.

உரிமையாளன், "சேற்றில் அறிவில்லாமல் சிக்கி விட்டாயே..." என திட்டி, மற்ற கழுதைகளை ஓட்டி சென்றான். சேற்றில் சிக்கித் தவித்தபடி இருந்தது கழுதை.

அப்போது அருகே வந்த நரி, "உன்னை தின்னப் போகிறேன்..." என்றது.

யோசித்த கழுதை, 'இப்போது, சேற்றில் சிக்கியுள்ளதால் சத்து இல்லாமல் வாடி இருக்கிறேன்; எனக்கு தீனி போடு... நன்றாக கொழுத்தால் இன்னும் ருசியாக இருப்பேன்...' என்று நைசாக பேசியது.

சம்மதித்த நரி, தீனி எடுத்துத் தர ஆரம்பித்தது. அந்த உணவை தின்று, தெம்பு பெற்றதும் சேற்றில் இருந்து வெளியேறியது கழுதை.

அப்போது, "உன்னை தின்னட்டுமா..." என, கேட்டது நரி.

"தாராளமாக சாப்பிடலாம்.. அதற்கு முன் ஒரு போட்டி வைக்கலாம்... அதில் வென்றால் ஆட்சேபனை இல்லை..." என்றது கழுதை.

"என்ன போட்டி..."

"நீ மூன்று முறை என்னை உதைக்க வேண்டும்; நான் இரண்டு முறை மட்டும் உன்னை உதைப்பேன்..."

போட்டிக்கு சம்மதித்து, முதல் ஆட்டமாக மூன்று உதைகளை விட்டது நரி.

அசராமல் வாங்கி நின்றது கழுதை.

அடுத்தது கழுதையின் முறை. முழு பலத்துடன் உதைத்தது!

அவ்வளவு தான்... நிலை குலைந்து தலை சுற்றி, அப்பால் போய் விழுந்தது நரி.

"இன்னும் ஒரு உதை பாக்கி உள்ளதே... அதை வாங்கினால் உயிரோடு இருப்போமா" என, எண்ணி நடுங்கி, பிழைத்தால் போதும் என தப்பி ஓடியது நரி.

**துன்பம் வரும்போது கலங்காமல் யோசித்தால், வாழ்வில் வெற்றி அடையலாம்.**





# கிறிஸ்தோபர் கொலம்பஸ்

1451 ஆம் ஆண்டு வடமேற்கு இத்தாலி நாட்டின் ஜெனொவா நகரில் பிறந்த கிறிஸ்தோபர் கொலம்பஸ். இவர் இத்தாலிய நாடுகாண் பயணியும் வணிகரும் காலனித்துவவாதியும் ஆவார். இவர் 1492இல் அட்லாண்டிக் கடலைக் கடந்து அமெரிக்காவை (எசுப்பானியா நாட்டுக்கொடியுடன்) வந்தடைந்த முதல் ஐரோப்பியர் ஆவார். அவர் இத்தாலியின் செனோவா என்ற குடியரசைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தவராகக் கருதப்படுகின்றார். அவருடைய கடுமையான ஈடுபாட்டின் காரணமாக அமெரிக்காவைப் பற்றி ஐரோப்பா தெரிந்து கொள்ள வழிவகுத்தது. அத்தோடு இன்றைக்கு பல்வேறு கண்டங்களின் உறவுக்கும் அவருடைய கண்டுபிடிப்பே காரணமாகும்.

உண்மையாக கொலம்பஸ் அமெரிக்காவை அடைந்த முதல் மனிதர் அல்லர். ஏனென்றால் அங்கே ஏற்கெனவே மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதை அவர் கண்டறிந்தார். முதல் ஐரோப்பியரும் அல்லர். ஏனென்றால் வைக்கிங்கள்,வட ஐரோப்பாவிலிருந்து 11ம் நூற்றாண்டிலேயே வட அமெரிக்காவுக்குச் சென்றுள்ளனர். இருந்தாலும், கொலம்பஸின் பயணமே ஐரோப்பியர்களின் அமெரிக்கக்குடியேற்றத்துக்கு அடிப்படையாகும். அதுவே உரேசியா மற்றும் ஆப்பிரிக்காவை அமெரிக்காவுடன் இணைத்ததற்கு முக்கிய காரணமாகும்.



# ஆறுமுக நாவலர்



ஆறுமுக நாவலர்
அருந்தமிழின் காவலர்
வீறுகொண்டு சைவத்தின்
மேன்மைதந்த கோனவர்

நல்லூரிலே பிறந்தவர்
நல்லறிவு நிறைந்தவர்
எல்லோருக்கும் இனியவர்
ஈசனையே பணிபவர்

திருக்குறளை மிகமிகத்
திருத்தமாகப் பதித்தவர்
இருக்குமுதல் வேதங்கள்
இயம்பும் நெறியை மதித்தவர்

கந்தபுராணங் கற்றவர்
கருணையுள்ளம் பெற்றவர்
சிந்தைசெயலில் தூயவர்
சித்தாந்தமே ஆய்பவர்

பேச்சில்மிகவும் வல்லவர்
பிறம்மதத்தை வெல்பவர்
மூச்சும்தமிழ்க்காய் விட்டவர்
மும்மலத்தைச் சுட்டவர்

தென்னாட்டிலும் ஈழத்தின்
சிறப்பைநாட்டி வைத்தவர்
பொன்னாட்டினும் புரவலன்
போற்றுமெங்கள் நாவலன்

# பொது அறிவு



உலகின் மிகப் பெரிய விலங்கு எது?
திமிங்கிலம்

உலகிலேயே மிக நீளமான நதி எது?
அமேசன்

உலகிலேயே பெரிய பாலைவனம்?
சஹாரா பாலைவனம்

உலகிலேயே மிகச் சிறிய அரசு?
வத்திக்கான்

உலகிலேயே பெரிய சமுத்திரம்?
பசுபிக் சமுத்திரம்

உலகிலேயே பெரிய தீவு?
கிறீன்லாந்து

உலகிலேயே பெரிய கண்டம்?
ஆசிரியாக் கண்டம்

உலகிலேயே சிறிய கண்டம்?
அவுஸ்ரேலியா

அதிக எரிமலைகள் உள்ள நாடு
இந்தோனேஷியா



# ஆங்கிலம் கற்போம்



Big - பெரிய
Beautiful - அழகு
Good - நல்ல
Bad - கெட்ட
Thank You - நன்றி
What - என்ன



தாமரை
Lotus



சூரிய காந்தி
Sunflowers




ரோஜா
Rose



மல்லிகை
Jasmine

## 5 வித்தியாசங்கள் கண்டுபிடிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பசியால்...

னேஸ்வரன் உள்ளூர் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'நம்பிக்கைப் பொறுப்பு' என்ற நன்கொடை அமைப்பின் வங்கிக் கணக்குக்கு, விரும்பியவர்கள் முடிந்தளவு நிதியை அனுப்புமாறும் கிடைக்கும் நிதி மற்றும் செலவழிக்கும் பணம் ஆகியவற்றுக்கான கணக்கு அறிக்கை ஊடகங்களில் வெளியிடப்படும் என்றும், வழங்கப்படும் நிதிக்கான பற்றுச்சீட்டும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் விடுத்த அறிக்கையில்,

கொரோனா பரவலின் தீவிரம் காரணமாக தொடரும் பயணத் தடைகள் மற்றும் முடக்கம் காரணமாக பல்லாயிரக் கணக்கான ஏழை, எளிய மக்கள் உண்ண உணவின்றி பெருந் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக, அரச வேலைகளோ அல்லது தனியார் நிறுவன வேலைகளோ இல்லாமல் தினமும் கூலி வேலை செய்து வாழ்ந்துவந்த குடும்பங்கள் எந்தவிதமான வருமானமும் இன்றி அனுபவித்துவரும் துன்பங்கள் பற்றிய ஏராளமான செய்திகள் நாளாந்தம் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. இவற்றை நீங்கள் அறிவீர்கள்.

எம்மால் முடிந்தளவுக்கு வெளிநாடுகளில் இருக்கும் ஆதரவாளர்கள், தெரிந்தவர்களின் உதவிகளுடன் சில உதவிகளை நாம் செய்துவருகின்றோம். அதேபோல, ஏனைய கட்சிகளும் தம்மால் முடிந்தளவுக்கு மக்களுக்கு உதவிகளைச் செய்துவருகின்றார்கள். ஆனால், இந்த உதவிகள் எல்லாமே 'யானைப் பசிக்கு சோளப்பொரி' போலவே இருக்கின்றன. எம்மால் முடிந்தளவுக்கு எமது சக உறவுகளின் பசியைப்போக்கி இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு எம் எல்லோருக்கும் இருக்கின்றது.

'நம்பிக்கைப் பொறுப்பு' என்ற எமது பதிவுசெய்யப்பட்ட நன்கொடை அமைப்பின் ஊடாக இவ்வாறு அல்லலுறும் மக்களுக்கு எம்மால் முடிந்தளவுக்கு நிவாரண உதவிகளைச்செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றோம்.

'நம்பிக்கைப் பொறுப்பு' என்பது முற்றிலும் ஒரு நன்கொடை அமைப்பு. இதன் ஊடாக கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் ஏற்கனவே நாம் நிவாரணம் வழங்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். தயவுசெய்து உங்களால் முடிந்தளவு நிதி உதவியை நாம் முன்னெடுக்கும் கொரோனா நிவாரணப் பணிகளுக்கு வழங்கி உதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். நீங்கள் வழங்கும் உதவிகள் முழுமையாக கொரோனா நிவாரணப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்று உறுதி வழங்குவதுடன் நீங்கள் அனுப்பும் பணம் மற்றும் செலவழித்த தொகை ஆகியவற்றுக்கான கணக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும். அத்துடன், நீங்கள் வழங்கும் நிதி உதவிக்கான பற்றுச்சீட்டும் தனித்தனியாக உங்களுக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்படும். அண்மையில் நடந்த தேர்தல் வரவு செலவுகளை வெளிப்படையாக நாங்கள் நடத்தி பத்திரிகைகளில் உரிய விவரங்களை வெளியிட்டிருந்தோம்.

நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் வங்கிகள் மற்றும் கணக்கு போன்ற விவரங்களை மற்றும் உங்கள் பெயர் விவரம், அனுப்பிய தொகை, அனுப்பிய திகதி ஆகியவற்றை cvwofficenallur@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். நிதி உதவி செய்பவர்களின் பெயர் விவரங்கள் ஊடகங்களில் வெளியிடப்படாது. மேலதிக தகவல்களுக்குமேலேதரப்பட்ட மின்னஞ்சலின் ஊடாக தொடர்பு கொள்ளவும் - என்றுள்ளது. (த)

### 335 பேர்...

யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்தோடு குறித்த தாக்கத்தால் 58 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

4 சிறு தொழில் முயற்சியா ளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-26)

# நெருப்பில் இருந்து பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் ஒருவர் குப்பைக்கு மூட்டிய தீக்குள் வீழ்ந்து உயிழந்துள்ளார்.

குப்பிளான் தெற்கு பகுதியைச் சேர்ந்த சுதாகினி அன்னலிங்கம் (வயது 43) என்பவரே கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று அதிகாலை வேளை வீட்டில் உள்ளோர் நித்திரையால் எழ முன்னர் அவர் நித்திரையால் எழுந்து வீட்டு காணியை கூட்டி குப்பைகளுக்கு தீ வைத்துள்ளார். அந்த தீயில் முக குப்புற வீழ்ந்து கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

காலை கணவன் எழுந்து மனைவியை தேடிய போதே எரிந்த குப்பைகளுடன் மனைவியின் சடலம் காணப்பட்டதை அவதானித்து சுன்னாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.



பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டு, சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.

குறித்த குடும்பப் பெண் நோய் வாய்ப்பட்டு இருந்தார் என்றும் அதற்காக சிகிச்சை பெற்று வந்தவர் என்றும் உயர் இரத்த அழுத்தம் காரணமாக, எரிந்துகொண்டிருந்த குப்பைக்கு மேல் வீழ்ந்திருக்கலாம் என்றும் உறவினர்கள் இறப்பு விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (த-10)


# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா பரமேஸ்வரி

வட்டுக்கோட்டை தெற்கு காளிகோவிலடியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா பரமேஸ்வரி நேற்று (14.06.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அமரர் கணபதிப்பிள்ளை நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும், அமரர் ஸ்ரீரங்கநாதன், ஜெயசிறி (லண்டன்), ஜெயராணி (லண்டன்), சிறிகரன் (லண்டன்), சிறிரஞ்சன் (அமரர்), சிறிகாந்தன், ஜெயராஜ் (அமரர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோவிலடி,
வட்டுக்கோட்டை.
காந்தன் - 077 170 2497
யசோ (பேரன்)- 077 087 2688

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 05 . 1943



இறப்பு
13 . 06 . 2021

## அப்பையா குணசிங்கம்

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா குணசிங்கம் அவர்கள் கடந்த (13.06.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முதலிதம்பி - அருளம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், இரத்தினசிங்கம், சண்முகநாதன், தர்மலிங்கம், இராசம்மா இராசதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சகிதா (சுவிஸ்), யசோதா (யாழ்ப்பாணம்), யசோதரன் (அமெரிக்கா), பகீரதன் (வேலணை பிரதேச சபை T.O) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதிர்காமநாதன் (சுவிஸ்), றமணன் (எலேற்ரோனிக் கடை - கோண்டாவில்), கஜனி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருசன், தர்மிசா, அன்சிகா, டக்சன், றுக்ஷாயினி, பவசாந்தன், ஜனுசாந்தன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், றுக்ஷன், வர்சா, தர்சா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.06.2021) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
பகீதரன் (மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசை....

இவ்வாறு தெரிவித்தார், ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் எரிபொருள் தாங்கியொன்றின் விலை 20 டொலர் வரை குறைவடைந்தபோதிலும், அதன் மூலம் பயன்பெறக்கூடிய சலுகையை இந்த அரசு மக்களுக்கு வழங்கவில்லை. மாறாக இதன்மூலம் கிடைக்கும் இலாபத்தின் ஊடாக நிதியமொன்றை ஸ்தாபித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தனவந்தர்களுக்கு வரிச் சலுகையை வழங்கியமை காரணமாக அரசுக்கு பெரும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் தற்போது அந்த சுமையை மக்கள்மீது இறக்க முயற்சிக்கின்றனர். இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அரசின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தின் ஊடாக மிகக் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, தேவையேற்படின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சமர்ப்பிப்பதற்கும் எதிர்க்[illegible] என்ற ரீதியில் பின்வாங்கப் போவதில்லை. இதுவே எமது எதிர்பார்ப்பாகும். எந்தவொரு விடயத்தையும் முறையாக செய்துமுடிக்க முடியாத மற்றும் முக்கிய தீர்மானங்களை ஸ்திரமாக எடுக்க முடியாத அரசின் இயலாமை எரிபொருள் விலை அதிகரிப்பின் ஊடாக வெளிப்பட்டுள்ளது. எனினும், உண்மைப் பிரச்சினையான எரிபொருள் விலை விவகாரம் மறைக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. மக்களுக்காக தொடர்ந்தும் போராடுவோம். என்றார். (த-இ)

## 2,259 பேருக்கு...

திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 25 ஆயிரத்து 897 ஆக எகிறியுள்ளது.

மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சைபெறுபவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 230 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 464 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## 42 பேருக்கு...

நேற்றுப்பகல் 230 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 30 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்களில், யாழ்.மாநகர எல்லைக்குள் 6 பேருக்கும், வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருவருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும், யாழ். போதனா மருத்துவமனை மற்றும் வவுனியா செட்டிகுளம் ஆதார மருத்துவமனை ஆகியவற்றிலிருந்து தலா இருவருக்கும், பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும், பரந்தன் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்குமாக 30 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு 246 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 9 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் யாழ்.மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி எல்லைப் பகுதிக்குள் 5 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மற்றும் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட பொது மருத்துவமனைகளில் தலா ஒவ்வொருவரும் என 9 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்றுப் பகல் 153 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் வசாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்தவர்கள். (த-ஒ,5)

## மேலும் 124...

குணவர்தன இதனை நேற்று உறுதிப்படுத்தியுள்ளார் என அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரே நாளில் அறிவிக்கப்பட்ட அதிக கொரோனாச் சாவு எண்ணிக்கை இதுவாகும். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2ஆயிரத்து 260 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## திருமணத்தில்...

தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பொலிஸார் குறித்த பகுதியில் அதிகளவானவர்கள் திருமண நிகழ்வில் பங்குபற்றியமையை அவதானித்து யாழ்ப்பாண மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு அறிவித்தனர்.

அங்குவந்த யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர், 15 பேருக்கும் அதிகளவானவர்கள் திருமண நிகழ்வில் பங்குபற்றியமையை உறுதிப்படுத்தி அவர்களை தனிமைப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் 15 பேருக்கு உட்பட்ட எண்ணிக்கையில் மாத்திரமே திருமணப் பதிவை மேற்கொள்ள முடியும் என அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-20)

## இரவுவரை....

சிக்குண்டு பயணத் தடையால் வருமானமின்றி பொதுமக்கள் தவிக்க, எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டமையால், பொதுமக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

எரிபொருள்கள் விலை அதிகரிப்புக்கு எதிராக கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் கடும் கண்டனம் வெளியிடுகின்றனர்.

இந்தநிலையில், எரிபொருள்களின் விலையை மாற்றியமைக்கலாமா என்பது தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று நடைபெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியும், பிரதமரும் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எடுப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும், பேச்சு இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டபோதும், அதன் முடிவு குறித்த தகவல் வெளியாகவில்லை. (த)

## மொட்டுக்...

டிக் காட்டியுள்ளன. எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அதற்கான பொறுப்பை ஏற்று பதவி துறக்கவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் விடுத்த அறிக்கை தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அரச கூட்டுக்குள்ளும் குழப்பத்துக்கு வழி சமைத்துள்ளது. இந்தநிலையிலேயே, அரச பங்காளிக்கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்கட்சி, எமது மக்கள் சக்தி கட்சி, தேசிய காங்கிரஸ், ஐக்கிய மக்கள் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவை இணைந்து கூட்டாக நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. அதில்,

"எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு தீர்மானித்த நிலையில், விலை அதிகரிப்புக்கான பொறுப்பை வலுசக்தி அமைச்சர் கம்மன்பில ஏற்கவேண்டும். அவரின் தோளில் சுமை திணிக்கப்படுவதை ஏற்கமுடியாது. அந்தக்கூற்றை நிராகரிக்கின்றோம். இவ்வாறானதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதன் மூலம் வீணானதொரு பிரச்சினை உருவாக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலரால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எடுத்த முடிவை சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதன்மூலம் அரசுக்குள் குழு மோதல் உள்ளது என்ற விம்பம் உருவாகியுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகள் மேலோங்கினால் அரசுமீதான மக்களின் நம்பிக்கையில் அது தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, இத்தகைய அரசியல் நகர்வுகளை ஆரம்பத்திலேயே தோற்கடிப்பதற்கான பொறுப்பு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இருக்கின்றது." - என்று பங்காளிக் கட்சிகள் குறிப்பிட்டுள்ளன. (த-44)

## நாட்டைத்...

கும்படி கோரி பௌத்த பிக்கு ஒருவர், தம்புள்ளை நகரில் ஏ9 வீதி நடுவே அமர்ந்தவாறு நேற்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். நேற்றுக் காலையிலிருந்து அவர் அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார். பொலிஸார் அவரை அங்கிருந்து நகர்த்த எடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. திம்புலாகல விகாரையின் விகாராதிபதி யான மாத்தளை சாஷன ரத்தன தேரரே இவ்வாறு போராட்டத்தில் குதித்துள்ளார். இதன்போது, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை அவர் கடும் சொற்களால் விமர்சித்தார்.

அவரை அங்கிருந்து அகற்ற தம்புள்ளை நகரசபை முதல்வர் நேரில் வந்து பேசினார். பின்னர் ஜனாதிபதி செயலகத்துடன் தொலைபேசியில் பேச வசதியேற்படுத்தி தருவதாகக் கூறி, அங்கிருந்து தம்புள்ளை நகரசபைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## பருத்தித்துறையில்...

கில் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை கடற்படையினர் நடத்திய சிறப்பு நடவடிக்கையின்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று அதிகாலை வடக்கு பருத்தித்துறை கட்டளைத் தலைமையகம் நடத்திய சிறப்பு நடவடிக்கையின்போது, கரையை நோக்கி சந்தேகத்துக்கிடமான டிங்கி படகு ஒன்று பயணிப்பது கண்டறியப்பட்டது. கடற்படையினரைக்கண்டதும், அதில் பயணித்த சந்தேகநபர்கள் கேரளக் கஞ்சா கொண்ட இரண்டு சாக்குகளை தம்வசம் வைத்துக்கொண்டு ஏனைய 6 கஞ்சா சாக்குகளையும் கடலில் வீசியுள்ளனர். எனினும், கடலில் வீசிய கஞ்சா சாக்குகளை மீட்ட கடற்படையினர், சந்தேகநபர்கள் மூவரையும் கைதுசெய்தனர். சர்வதேச கடல் எல்லையில் உள்ள கேரளக் கஞ்சாவை டிங்கிக்கு கொண்டுவர கடத்தல்காரர்கள் முயன்றனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த கேரளக் கஞ்சாவின் பெறுமதி 7 கோடியே 10 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களில் இருவர் 27 வயதுடையவர்கள். அவர்கள் இருவரும் பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்தவர்கள். மற்றையவர் அச்சுவேலி வளலாய் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர்.

சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காங்கேசந்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26,159)

## கடலில்...

டிக்கை, கடல் வளத்தை அளிக்கும் செயற்பாடு என்று தெரிவித்தும் அதனைக் கைவிடுமாறு கோரியும் தமிழகத்தின் ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

தமிழகத்தில் 60 நாள்கள் மீன்பிடித் தடைக்காலம் நேற்று நள்ளிரவுடன் நிறைவு பெறகிறது. எதிர்வரும் 30 ஆம் திகதி மீன் பிடிக்க கடலுக்கு செல்லலாம் என்று முடிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து ராமேஸ்வரம் மீன்பிடி டோக்கன் பெறும் அலுவலக வளாகத்தில் விசைப்படகு மீனவர்கள் நேற்று அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். அந்தக் கூட்டத்தில் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலை அழிக்கும் நோக்கத்தோடு இலங்கை அரசு சர்வதேச கடல் எல்லைக்கு அருகே கைவிடப்பட்ட பஸ்களை இறக்கிவிட்டுள்ளது. இந்திய இலங்கை மீனவர்கள் பாரம்பரியமாக மீன் பிடித்துவரும் இடங்களான கச்சத்தீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய பகுதிகளில் குறித்த பஸ்கள் இறக்கிவிடப்பட்டுள்ளன.

இத்தகைய செயற்பாட்டால், கடல் மாசுபடுவதுடன் தமிழக மீனவர்கள் இந்திய கடற்பரப்பில் மீன் பிடித்தாலும் அவர்கள் விரிக்கும் மீன்பிடி வலைகள் காற்றின் வேகம் காரணமாகவும், கடல் நீரோட்டம் காரணமாகவும் இலங்கை கடற்பகுதிக்குள்ளும் செல்லகூடும். இதனால் படகுகள் மற்றும் வலைகள் சேதமடைந்து இழப்பு ஏற்படும் என்பதால் உடனடியாக இலங்கை மீன்வளத்துறை இந்த திட்டத்தை கைவிட வேண்டும். அதேபோல் நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் டீசல் விலையால் மீனவர்கள் தங்களது படகுகளை இயக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது எனவே மத்திய, மாநில அரசுகள் கலால், சாலை வரிகளை நீக்கி மீனவர்களுக்கு உற்பத்தி விலையில் டீசல் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி புதன்கிழமை ராமேஸ்வரம் பேருந்து நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்ச் பகிரங்கத்தில் ஜோகோவிக் சம்பியன்!

பரிஸ், ஜூன் 15

சர்வதேச அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரெஞ்ச் பகிரங்கத் தொடரில் கிண்ணம் வென்றார் சேர்பிய வீரரான ஜோகோவிக். இதையடுத்து நடால், பெடரர் இடையிலான சாதனைப் பட்டியலில் ஜோகோவிக்கும் விரைவில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



பரிஸ் நகரில் இந்தத் தொடர் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உலகின் முதல்நிலை வீரரான ஜோகோவிக்கை எதிர்த்து கிரீஸ் நாட்டைச் சேர்ந்த சிட்சிபாஸ் மோதினார். 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் 6:7, 2:6 என்ற கணக்கில் ஜோகோவிக் அதிர்ச்சிகரமாக இழந்தார். இதனால் இன்னும் ஒரு செற்றைக் கைப்பற்றினால் சிட்சிபாஸ் சம்பியன் என்ற நிலை. சரிவில் இருந்து மீண்டு அடுத்த மூன்று செற்களையும் முறையே 6:3, 6:2, 6:4 என்ற கணக்கில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் சம்பியனானார் ஜோகோவிக். இது ஜோகோவிக்கின் இரண்டாவது பிரெஞ்ச் கிண்ணமாகும். அத்துடன் ஒட்டுமொத்தத்தில் ஜோகோவிக்கின் 19ஆவது பகிரங்கக் கிண்ணமாகும். இந்தப் பட்டியலில் நடால், பெடரர் இருவரும் முதலிடத்தில் உள்ளனர். அவர்கள் இருவரும் தலா 20 கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளனர். (ம)



## விரைவில் குணமடைவேன் நம்பிக்கையில் டுபிளஸி!

கேப்டவுன், ஜூன் 15

கிரிக்கெட் போட்டியில் சக வீரருடன் மோதி காயமடைந்த தென்னாபிரிக்க வீரர் டுபிளஸி விரைவில் குணமடைவேன் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் லீக் தொடர் நடந்து வருகிறது. இதில் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் என்கிற அணியில் டுபிளஸிஸ் விளையாடி வருகிறார். கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்ட டுபிளஸி பந்து பவுண்டரிக்குச் செல்வதைத் தடுக்க முற்பட்டபோது தனது அணியின் சக வீரர் முகமது ஹஸ்னைனுடன் மோதியதில் காயமடைந்தார்.

இதையடுத்து டுபிளஸி உடனடியாக அபுதாபியில் இருக்கும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மருத்துவச் சோதனையில் பலமாக மோதியதால் டுபிளஸிக்கு மூளை அதிர்ச்சியும், இலேசான நினைவிழப்பும் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது தான் உடல் நலனுடன் உள்ளேன் என்றும் விரைவில் மீண்டு வருவேன் என்றும் டுபிளஸி தெரிவித்துள்ளார். (ம)

## பற்றிக் அசத்தலாட்டம் செக்குடியரசு வெற்றி!

உரோம், ஜூன் 15

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்கொட்லாந்தை வீழ்த்தியது செக்குடியரசு.

ஆட்டத்தின் முதல் 40 நிமிடங்கள் வரையில் இரண்டு அணிகளும் ஒன்றுக்கொன்று ஈடுகொடுத்து சிறப்பாக விளையாடின. 42ஆவது நிமிடத்தில் செக்குடியரசின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பற்றிக். செக்குடியரசு 1:0 என்று ஆதிக்கம் செலுத்திய நிலையில் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 52ஆவது நிமிடத்தில் பற்றிக் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய ஆட்டத்தில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்தியது செக்குடியரசு. ஆட்டத்தின் முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஸ்கொட்லாந்துக்கு இரு அருமையான வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் செக்குடியரசு அணியின் கோல் காப்பாளரின் சாமர்த்தியத்தால் கோல் வாய்ப்புக்கள் முறியடிக்கப்பட்டன. (ம)





## உக்ரைனை வீழ்த்தியது நெதர்லாந்து இரண்டாவது பாதியில் கோல்மழை!

உரோம், ஜூன் 15

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் உக்ரைனை வீழ்த்தியது நெதர்லாந்து அணி.

ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளுமே சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தி விளையாடின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. ஆனால் இரண்டாவது பாதியில் நிலைமை தலைகீழாக மாறியது. இரு அணிகளின் பின்வரிசை பலவீனமானதாக உணரப்பட்டது. இதனால் மாறிமாறி இரு அணிகளும் கோல்களைப் பதிவுசெய்தன. ஜியோர்ஜினோ 52ஆவது நிமிடத்திலும் வோல்ட் 58ஆவது நிமிடத்திலும் நெதர்லாந்தின் சார்பாகக் கோல்களைப் பதிவுசெய்தனர். ஆனால் ஆட்டத்தின் 75ஆவது மற்றும் 79ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தது உக்ரைன். 2:2 என்ற நிலையில் ஆட்டம் நகர்ந்து கொண்டிருக்கையில் ஆட்டத்தின் 85ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் டன்செல் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நெதர்லாந்து. (ம)




தேவை
இரும்பு ஒட்டுனர் (வெல்டிங் வேர்க்) வேலையாள் தேவை.
076 660 1600

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
அமரர் யோகானந்தா லோகேஸ்வரி
பிறப்பு 17.01.1951
மறைவு 16.05.2021



கடந்த 16.05.2021 அன்று இறைபதமடைந்த எனது தாயாரின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி, பத்திரிகை மூலமாகவும், மலர் வளையங்கள், அஞ்சலிப் பதாகைகள் வாயிலாகவும் இறுதி அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள். இன்றைய முப்பத்தோராம் நாளில் தற்போதைய சூழ்நிலையில் எவரையும் அழைக்க முடியாத நிலைக்கு மனவருத்தமடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மகன்-யோ.மகிழ்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15. 06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.